egistered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

| ஈழநாடு சந்தா விபரம் | | |
|---|---|---|
| இந்தியா — இலங்கை | | |
| | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
| 1 வருடம் | 48-00 | 1 -00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி சித்திரை 25 ஆம் நாள் துல்ஹஜ் 24 (7-5-64) வியாழக்கிழமை இதழ் 86

யாழ்ப்பாணத்திற்கு

# கொல்வினின் திடீர் விஜய மர்மம்

## சமசமாஜ வட்டாரங்களில் பெரும் பரபரப்பு!

யாழ்ப்பாணம், வியாழன்

லங்கா சமசமாஜக்கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான டாக்டர் கொல்வின் ஆர். டி' சில்வா நேற்று 1-30 மணியளவில் யாழ்தேவியில் யாழ்ப்பாணம் வந்து மத்திய கமிட்டி அங்கத்தவர் திரு. ஆர். ஆர். தர்மரத்தினத்தைச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடாத்தி விட்டு திடீரென 4 மணிக்கு விமானம் மூலம் திரும்பிய மர்மம் பற்றி சமசமாஜக்கட்சி வட்டாரங்களில் பெரிய பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

வடபகுதிக்காக மத்திய கமிட்டியில் அங்கம் வகிக்கும் திரு. தர்மரத்தினம் என். எம். மின கூட்டாட்சிக் கொள்கைக்கும் அதற்கான எட்மன்டின் எதிர்ப்புக் கொள்கைக்கும் மத்திய பாதையில் செல்பவரென மதிக்கப்படுவர். கொல்வினும் என். எம்.மிற்கு ஆதரவானவர். வருகிற 9-ம் திகதி சனிக்கிழமை லங்கா சமசமாஜக் கட்சியின் மத்திய கமிட்டி கூட்டாட்சி பற்றித் தீர்மானிக்கவிருக்கிறது. என். எம்.யாழ்ப்பாணம் வந்து சென்றவுடன் கொல்வினும் வந்தது திரு. தர்மரத்தினத்தை என். எம். மின் வழியில் திருப்புவதற்கு என்று சில சமசமாஜக்கட்சி அங்கத்தவர்கள் நம்புவதால் திரு. தர்மரத்தினத்தை எட்மன்ட் சமரக்கொடியின் வழியில் திருப்பும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனரென்று நம்பகமான வட்டாரங்களில் சொல்லப்பட்டது. என். எம்.முக்கு ஆதரவான ஒரு சமசமாஜ பிரமுகரை நமது நிருபர் கேட்டபொழுது டாக்டர் கொல்வின் நண்பர்களைச் சந்திக்கவே திடீர் விஜயஞ்செய்ததாக அறிவித்தார். ஆனல் திரு. தர்மரத்தினத்தை என். எம்மிற்காக ஸ்திரப்படுத்துவதற்காகவே கொல்வின் இத்திடீர் விஜயம் என்று எட்மன்ட் கோஷ்டியினர் அபிப்பிராயப்படுகின்றனர். என். எம்முக்காக வாக்களிக்கக்கூடிய திரு. தர்மரத்தினம் மத்திய கமிட்டிக்குப் போகாது தடுக்கும் முயற்சியும் கையாளப்படுகின்றதெனச் சொல்லப்படுகின்றது.

## சிமெந்து தொழிற்சாலையில் தொழில் நுட்பப்பயிற்சி

நல்லூர், வியாழன்

இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனம் இருபது வயதுக்குட்பட்ட தொழில் நுட்பக் கல்வி பெறும் இளைஞர்களுக்கு தொழில் நுட்பப் பயிற்சி அளிக்க ஏற்பாடுகள் செய்துள்ளது. பயிற்சி பெற விரும்பும் இளைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை சிமெந்து கூட்டுஸ்தாபனம் தொழில் பயில்வோர் (தொழில் நுட்பம்) இலங்கையரிடமிருந்து இம்மாதம் 23-ந் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும்.

(5-ம் பக்கம் பார்க்க)

## தமிழாசிரியர்சங்க ஆர்ப்பாட்ட ஊர்வலம் 16ந் திகதிநடைபெறும்

நல்லூர், வியாழன்

அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின் கோரிக்கைகக்கான ஊர்வலமும் பொதுக் கூட்டமும் இம்மாதம் 16-ம் திகதி சனிக்கிழமை நடைபெறுமென வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கக் காரியதரிசி அறிவித்துள்ளார்.

அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின் பதினொரு கிளைச் சங்கங்களும், ஏனைய தமிழாசிரியர் சங்கங்களும் கலந்துகொள்ளும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்திலிருந்து புறப்படும். இரு பிரிவாக அணிவகுத்துச்செல்லும் ஆசிரியர்கள் தமது கோரிக்கைகளைக் கோஷித்துக்கொண்டு செல்வர்.

அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின் ஒவ்வொரு கிளைகளும் தமதுநிர்வாகசபைகளையும் பொதுக் கூட்டங்களையும் உடனடியாகக் கூட்டி ஏற்பாடுகளைக் கவனிக்கும்படி கோரப்பட்டுள்ளன.

தமிழாசிரியர்களை எதிர்நோக்கியுள்ள பல பிரச்னைகளுக்குத் தீர்வுகாணும்முகமாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அகில இலங்கை தமிழாசிரியர் சங்கத்தின் பதினொரு அம்சக் கோரிக்கைகளும் வருமாறு:-

மொழி வேறுபாடின்றி சம சம்பளம் கொடுக்கவேண்டும்.

பென்ஷன் கொடுத்தலில் பேதம் வேண்டாம்.

அரசியலுரிமை ஆசிரியர்க

(5-ம் பக்கம் பார்க்க)

## கிராமசபை தேர்தல் ரத்துக்கும் எனக்கும் சம்பந்தமில்லை

### கிளிநொச்சி எம். பி. விளக்கம்

யாழ்ப்பாணம், வியாழன்

கிளிநொச்சி கிராமசபை தெரிவு நடப்பதற்கு முதல் நாள் தேர்தலை ரத்துச் செய்த ஸ்தல ஸ்தாபன மந்திரியின் நடவடிக்கையை வன்மையாகக் கண்டிப்பதுடன், தாமே இத்தேர்தலை ரத்துச் செய்ய மந்திரியைக் கோரியதாக பரப்பப்படும் அரசியல் பிரசாரம் எவ்வித ஆதாரமுமற்றதென்றும் இடதுசாரிகளின் வழமையான தந்திர அரசியல் பிரசாரமென்றும் கிளிநொச்சி எம். பி. திரு. அ. சிவசுந்தரம் நமது நிருபரிடம் கூறினர்.

திரு. சிவசுந்தரம் மேலும் குறிப்பிட்டதாவது:-

வட்டாரங்களை விஸ்தரிப்பதற்காகவே ஸ்தல ஸ்தாபன மந்திரி தேர்தலை ரத்துச் செய்வதாகக் காரணங்காட்டியிருக்கிறார். வட்டார விஸ்தரிப்புத் தேவையானதே. ஆனல் தேர்தல் நடைபெறுவதற்கு முதல் நாள் தேர்தலை ரத்துச் செய்வதாக அறிவிப்பது மிக ஏமாற்றத்தைக் கொடுக்கக் கூடியது, இது ஜனநாயகத்துக்கே முரணானது. இதற்குத் தூண்டுதலாக நானுமிருந்தேன் என்பது அவதூறானது. தமது

## கவர்னர் சம்பளம் பெறமாட்டார்

சென்னை, மே 6

தமிழ் நாட்டின் புதிய கவர்னரான மைசூர் மகாராஜா தமக்கு எவ்வித சம்பளமும் வேண்டாம் என முடிவுசெய்திருக்கிறார். இன்று வெளியான அரசாங்க அறிவிப்பு கவர்னரின் முடிவுபற்றிக் குறிப்பிட்டது.

## தொடர்ந்து மழை

கொழும்பு, புதன்

நாட்டின் தென மேற்குப் பகுதியில் தாழ்ந்த வட்டாரங்களில் இடைவிடாது மழை பெய்துவருகிறதென்று அறிவிக்கப்படுகிறது.

சொந்தத் தேவைக்காக இடதுசாரி அரசியல்வாதிகள் அரசியல் தந்திரம் செய்கிறார்கள். அக்குற்றச்சாட்டை இவர்கள் இயலுமானல் நிரூபித்துக் காண்பிக்கட்டும்' அதுவே நீதி!

## இந்தியா தயாரித்த சூபர்ஸானிக்

புதுடில்லி, மே 6

இந்தியாவிலேயே முழுமையாகத் தயாரிக்கப்பட்ட நான்கு எச். எஸ். 24 ரக சூபர் ஸானிக் போர் விமானங்கள் வருகிற ஞாயிற்றுக்கிழமை விமானப்படையிடம் ஒப்படைக்கப்படவிருக்கிறது. இந்த நவீன ஜெட் போர் விமானங்கள் பெங்களூரில் தயாரிக்கப்பட்டன.

## சாஸ்திரி

புதுடில்லி, மே 6

பகைவர்களுக்கு பாகிஸ்தான் ஆயுத சப்ளை செய்வது ஆட்சேபனைக்குரியது என மந்திரி லால்பகதூர் சாஸ்திரி அறிவித்தார்.

## இரதவெள்ளோட்டம்

மிருசுவில், வியாழன்

உசன் கந்தசாமி கோயிலின் சொந்த நிதியிலிருந்து யாழ்ப்பாணம் திருநெல்வேலியைச் சேர்ந்த சிற்பிகளின் கைத்திறன் கொண்டு அமைக்கப்பெற்ற புதிய இரதத்தின் வெள்ளோட்டம் 8-5-64 வெள்ளிக்கிழமை காலை 8-45-க்கு நடைபெற இருக்கின்றது. அன்று திரு. சீ. வினசித்தம்பியின் "திருப்பணி மகிமை" என்னும் பொருள் பற்றிய சொற்பொழிவும், பிரபல வித்துவான்களது மேளக்கச்சேரியும், பக்கவாத்தியங்களுடன் கூடிய பக்திப்பாடல் ஓதுதலும் முக்கிய நிகழ்சிகளாக இடம் பெறுகின்றன அன்று அன்னதானம் வழங்கவும் கோவில் தர்மகர்த்தாக்கள் சிறந்த முறையில் ஒழுங்குகள் செய்துள்ளார்கள்.

புகையிலை - மிளகாய் - கத்தரி - முந்திரிகை முதலிய பயிர்களில் உண்டாகும்
சுருணைகளையும் புழுக்களையும் அழிப்பதற்கு
BAYER
பொலிடோலுடன்--மெற்றசிஸ்ரொக்ஸ்
FOLIDOL METASYSTOX
கலந்து நாற்று மேடையில் இருந்து பாவிக்கத் தொடங்கவும்
PHONE 397 JAFFNA ROYAL DISPENSARY T'GRAMS ROYAEL

**மணிவாக்கு**

இறைவன் நம்முள் இருக்கின்ருன் என்பதை உணர்வதே, ஆத்மசுத்திக்கான வழியாகும். அவ்வித உணர்வும் அனுபூதியும் நமக்கு அளிக்கும் மனோபலத்தைவிடப் பெரிய பலம் வேறு எதுவுமில்லை.

— மகாத்மா காந்தி.


# ஈழநாடு

EELA NADU

EELA NADU National Tamil Daily, Post Box 49, Jaffna
Telegram: EELA NADU, Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு சித்திரை மீ 25 உ (7-5-64)


## நாட்டுக்கு நல்லதல்ல

இடதுசாரி ஐக்கிய முன்னணி அரசாங்கத்துடன் சேர்ந்தால் இந்தியருக்குப் பிரஜாவுரிமை கிடைத்துவிடுமென்றும் இலங்கை, இந்தியாவின் குடியேற்ற நாடாகிவிடுமென்றும் இந்திய வம்சாவளியினரெல்லாரும் கள்ளத்தோணிகள் என்றும் அவர்களை விரட்டவேண்டுமென்றும் வெலிமடைப் பிரதிநிதி பொதுக்கூட்டங்களில் துவேஷப் பிரசாரம் செய்துவருகின்ருர். கடந்த கால அனுபவங்களின் பின் நாட்டிலே சமூக ஐக்கியத்தின் அவசியத்தைப் பல தேசாபிமானிகளும் உணர்ந்துள்ள இச்சமயத்திலும் வெலிமடை எம். பி. பேசி வருவது நிம்மதி அளிக்கக்கூடியதல்ல.

மல்வத்தை மதபீடத் தலைவர் மகாநாயகதேரோவும் மற்றும் அரசியல் தலைவர்களும் கூட நாட்டின் ஐக்கியத்தை வலியுறுத்தி வருகின்றனர். பல்வேறு சமூக மக்களுக்கிடையில் நிலவும் வேற்றுமைதான் நாட்டின் இன்றைய பொருளாதார, அரசியல், சமூக சீர்கேடுகளுக்கெல்லாம் காரணம் என்பதையும் பலரும் உணர்ந்துள்ளனர். இந்நிலையிலும்கூட இந்நாட்டில் வாழும் ஒரு சமூகத்திற்கெதிராக துவேஷப் பிரசாரம் செய்வது நாட்டின் நன்மைக்குச் சிறிதும் உதவமாட்டாது.

ஜனநாயக ஆட்சியில் பேச்சுச் சுதந்திரம் ஒரு முக்கியமான அம்சம் தான். ஆனால் அதற்கும் ஒரு வரம்பு முறை இருக்க வேண்டும். பேச்சுச் சுதந்திரம் என்ற பெயரால் வகுப்பு துவேஷத்தைக் கிளப்புவது எந்த அளவிற்குக் கொண்டு போய்விடுமென்பதற்கு 1958-ம் ஆண்டில் நிகழ்ந்த துரதிஷ்ட சம்பவங்கள் ஓர் எச்சரிக்கை. வகுப்புவெறியைத் தூண்டிவிட்ட குற்றத்துக்காக நீதிமன்றத்தினுல் ஏற்கனவே தண்டிக்கப்பட்ட அவர் கவர்னர் ஜெனரலின் கருணையினுல் தண்டனையை முற்ருக அனுபவிக்காமல் வெளிவந்தார். என்ருலும் மனம் திருந்தியதாகத் தெரியவில்லை. இதற்கு நேர்மாருக அவர் போக்குவுள்ளது.

இந்திய வம்சாவளியினருக்கு உரிமை கொடுக்கக்கூடாதென்றும், இந்தியாவுக்கு எதிராகவும், தமிழ் மொழிக்கும் தமிழர்களுக்கும் எதிராகவும் பேசுவதுதான் தேசாபிமானத்தைக் காட்டுவதற்கு சரியான மார்க்கம் என்றும் வெலிமடைப் பிரதிநிதியும் வேறுசிலரும் கருதுகிருர்கள் போலும். இந் நாட்டின் பொருளாதாரத்துக்கு முதுகெலும்பு போலுள்ளவர்களை இப்படித் தூற்றுவது எவ்விதத்திலும் நல்லதன்று.

அவரது கொள்கையை சிங்களப் பொதுமக்களும் ஆதரிக்கவில்லை என்பதற்கு, பொதுத் தேர்தலில் அவரது கட்சிக்கு ஏற்பட்ட பெரும் தோல்வியே சான்ருகும்.

தேர்தல் வரும், போகும். அரசாங்கம் வரும், போகும். அரசியல்வாதிகள் வருவார்கள் போவார்கள். ஆனுல் நாடும் நாட்டு மக்களும் வந்துபோகும் காட்சிகளல்ல. மக்கள் ஐக்கியமாக வாழ்ந்தால்தான் நாட்டில் அமைதி நிலவும்; நாடும் முன்னேறும். ஏற்கனவே ஐக்கியம் குலைந்து, பொருளாதாரம் சீர்கெட்டு நாடு அல்லல்படும் இச் சமயத்தில் மக்களுக்கிடையில் துவேஷத்தை மூட்டிவிடும் பேச்சுக்களுக்கும் செயல்களுக்கும் இடம் கொடுப்பது நாட்டிற்குச் செய்யும் பெருந் தீங்காகும்.

இங்குள்ள இந்திய வம்சாவளியினரின் பிரச்னையை இனியுங் காலங்கடத்தாமல் சுமுகமாகத் தீர்க்கவேண்டியதுதான். இது மனிதர்களுடைய பிரச்னை. மனிதாபிமானத்துடன் தீர்க்கவேண்டுமென்று காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்கா பன்முறையும் கூறியுள்ளார். ஆனுல் ஜாதிக விமுக்தி பெரமுனேத் தலைவர் பேசும் பேச்சுக்கள், இதற்கு நேர்மாருகவுள்ளதுடன், இப் பிரச்னையை தீர்ப்பதற்குப் பதில் அதிக சிக்கலாக்குவதாக இருக்கும். சட்டவிரோதமான இவ்வித துவேஷப் பிரசாரத்தைத் தடுக்காமல் இனியும் அனுமதிப்பதின் மூலம் அரசாங்கம் தன் கடமையைச் செய்யாததுடன் இங்குள்ள அரசியல் நிலைமையை மேலும் சங்கடமாக்கிக் கொள்வதாகும்.

யாழ்ப்பாணம் வண்ணையம் பதியில் அவதரித்து இளவயதிலேயே இந்தியா சென்றுவிட்ட இலக்கணச் சுவாமியார் என்ற ஸ்ரீமத் முத்துக்குமார தம்பிரானின் குருபூசை இன்ருகும். இப்பெரியாரின் பணிகளையும் துறவு வாழ்வையும் பற்றி தமிழகத்திலே பலர் போற்றியுள்ளனர். அவரை நன்றியுடன் நினைவு கூரும் முகமாக இரு தமிழ்ப்பெரியார்கள் எழுதியுள்ளவற்றை இங்கு வெளியிடுகின்ருேம்.

# ஸ்ரீமத் இலக்கணம் முத்துக்குமாரத்தம்பிரான் சுவாமிகள்

— சிவக்கவிமணி ஸி. கே. சுப்பிரமணிய முதலியார் —

ஸ்ரீமத் இலக்கணம் முத்துக்குமாரத்தம்பிரான் சுவாமிகள் சிதம்பரத்தில் மாலைகட்டித் தெருவில் மெய்கண்ட வித்தியாசாலையில் விரோதி வருஷம் சித்திரை மாதம் 10-ந் திகதி (22-4-49) தசமி அவிட்ட நாள் கூடிய வெள்ளிக்கிழமை பகல் 10-30 மணியளவில் அம்பலவாணர் திருவடி அடைந்தார்கள். அவர்களது மறைவு சைவவுலகத்துக்குப் பெருத்த நட்டமாகும். அவர்கள் தமிழ் மொழி, வடமொழி இரண்டிலும் நிரம்பிய புலமை வாய்ந்தவர்கள். அதனோடு சைவசித்தாந்த சாஸ்திரங்களைத் துறைபோக ஐயந்திரிபறக் கற்றவர்கள்.

இலங்கை வண்ணர்பண்ணையில் பரம்பரைச் சைவவேளாள மரபில் அவதரித்த



இவர்கள் 14 வயதளவில் தமது நாட்டினை விட்டு இந் நாட்டுக்கு வந்துவிட்டார்கள். அதன்பின் இதுவரை தமது இலங்கை நாட்டுக்குச் சென்றதில்லை. இங்கு வந்த கால முதல் சைவசந்நியாச விதிப்படி துறவுபூண்டு பானுகோயில் என்று வழங்கும் சூரியனுர் கோயில் சிவாக்ர யோகிகளாதீனம் குருமூர்த்திகளாகச் சிறந்து விளங்கிய ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரசுவாமி தேசிகர்பால் முறையே முத்தீக்கையும் பெற்றுத் தமிழ் இலக்கிய இலக்கணங்களையும் சைவசித்தாந்த சாஸ்திரங்களையும் முறைப்படி உபதேசிக்கப் பெற்றனர். வடமொழிப் பயிற்சியும் அத்தேசிகர்பால் பெற்று விளங்கினர். சந்நியாசம் பூண்டு பிட்சை செய்துகொண்டு அநேக வருஷங்கள் வித்தைகள் பயின்றனர்.

நிரம்பிய கல்வியும் ஞானமும் பெற்று விளங்கினரேனும் ஒரு சிறிதும் ஆடம்பரமில்லாத தூயதவ ஒழுக்க வாழ்க்கை வாழ்ந்தனர். தவத்தால் மெலிந்த திருமேனியையுடையவர். அவர்களது பெருமுயற்சியாலே சிவஞான மாபாடியம் முழுவதும் அச்சில் வெளிவந்து ஞானத் தமிழுலகம் வீறுகொண்டு விளங்கக் காரணமாயிற்று.

சிவாக்ரபாடியம், சைவசந்நியாசபத்ததி, திருநாரையூர்ப் புராணம் முதலிய பல நூல்கள் தமிழிலும் வடமொழியிலும் வெளிப்படுத்தியவர் இவர்களாவர். தம்மை வந்தடைந்த பக்குவப்பட்ட நன் மாணக்கர்கள் பலருக்கும் சைவசாத்திரங்கள், இலக்கண இலக்கியப் பாடங்கள், சைவ புராணங்கள், இவற்றை முறையாகப் பாடஞ் சொல்லிப் பயிற்றுவிப்பார்கள். யான் எழுதி வெளியிட்டுவரும பெரிய புராண உரைக்குப் பேராதரவாய் எல்லாவகைகளாலும் ஊன்றுகோலாக உதவி வந்தனர். நாடோறும் தவருத சிவபூசை நியமம் உடையவர்கள். ஒன்றிரண்டு நாட்களே நோய்வாய்ப்பட்டு இருந்து சமாதியடைந்தார்கள்.

இவர்களது இன்னுயிர் இறைவர் திருவடிக்கீழ் இன்புற்றமர்வதாக.

—சித்தாந்தம், மே 1949

# சிவன் கழல் ஏந்திய செல்வர்

— ஸ்ரீலஸ்ரீ ஈசான சிவாசாரியார் —

சைவ சித்தாந்த சாஸ்திரங்களிற் சிறந்து விளங்குவதும் "ஆராய்ச்சி", "அநுபூதி" என்னும் இரு வகை ஞானங்களுள் அநுபூதி ஞானத்தையே விதந்தெடுத்தோதுவதுமாகிய திருவுந்தியார் திருக்களிற்றுப் படியார் என்ற அரிய சித்தாந்த சாஸ்திரத்தை, ஒரு சிவஞானச் செல்வர் அருளிச் செய்த உரையுடன் அதனைத் தேடிப் பிரதி செய்து வைத்திருந்தவர்கள ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகளாவர். இவர்கள் யாழ்ப்பாணத்தைச் சன்மபூமியாகவுடையவர். இவர் தமது பதினன்காமாண்டிலே நந்தமிழகத்துக்கு வந்து, ஸ்ரீ செல்லப்ப சுவாமிகள் சிதம்பரம் ஈசானியமடம் ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள் முதலிய பெரியோர்களிடத்தே இலக்கண இலக்கியப் பயிற்சி பெற்று, சூரியனுர் கோயிலாதீனம் ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமார தேசிகர் அவர்கள் திவ்ய சமூகத்தே சமய, விசேட, நிர்வாண தீக்ஷையும், சைவ சந்நியாசமும் பெற்றவர்கள். அகத்தும் புறத்தும் சிவபெருமானைப் பூசிக்கும் நியமும் பூண்டவர்கள். சைவ சாஸ்திரப் பயிற்சியிலும் போதனையிலும் சிறந்து விளங்கினவர் ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகள் அருளிச் செய்த சிவஞானமாபாடியத்தைச் செப்பஞ் செய்து திருத்தமாக அச்சுவாகனமேற்றுவித்தவர்கள். ஸ்ரீ சிவாக்கிர யோகிகள் தொகுத்தருளிய கிரியாதீபிகையைச் செப்பமாக அச்சிட்டு உபகரித்தவர்கள். சைவ சந்நியாசபத்ததி, தருமை ஆதீனத்து ஸ்ரீ குருஞானசம்பந்த பரமாசாரிய மூர்த்திகள் அருளிச் செய்த முத்தி நிச்சயம், அதன் மாபாடியம் முதலிய ஞான நூல்களையும் பரிசோதித்து உதவியவர்கள். பெரிய புராண உரையாசிரியராகிய, சிவக்கவிமணி சைவப் பெரியார் சுப்பிரமணிய முதலியார் அவர்களுக்கு அருந்துணையாய் நின்று பெரிய புராணப் பேருரைப் பணிக்குச் சித்தாந்த நுண்பொருள்களை ஆங்காங்கே வரைந்தருளிச் சிறப்பித்தவர்கள். இவர்கள் தொகுத்து வைத்திருந்த திருவுந்தியார் திருக்களிற்றுப்படியார் உரை இப்பெருநூல் ஆகும்.

(இது திருவுந்தியார் திருக்களிற்றுப்படியார் உரை வெளியிடப்பட்டபோது அந்நூற்கு அளித்த மதிப்புரையிலிருந்து எடுக்கப்பட்டது.)

## கி. ச. உபதலைவர்

நல்லூர், வியாழன்

தெல்லிப்பழை கிராமசபை உப தலைவராக 17 ம் வட்டார அங்கத்தவர் திரு. மு. முத்துலிங்கம் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இட துசாரி முன்னணி ஆதரவாளரான திரு. முத்துலிங்கம் உப தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருப்பதனைப் பாராட்டி மாவை பாரதி சனசமூக நிலையம் அவருக்கு வரவேற்புபசாரமளித்துக் கௌரவித்தது

திரு. க. சின்னையா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திருவாளர்கள் ஆர். எம். நாகலிங்கம், அ. செல்வராஜா, சி. சரவணமுத்து, ஏ. வைரமுத்து ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்.

## ஐயாறன் எழுதுவது

இலக்கணசுவாமியார் எனும் ஸ்ரீமுத்துக்குமாரத்தம்பிரானின் பொன்னனை திருவடிகளை வணங்கி இதை எழுதுகிறேன். இன்று அவருடைய குருபூசை. அவர் சமாதி கொண்டுள்ள சிதம்பரத்திலே இதுமிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. நம் ஈழநாட்டைச் சேர்ந்த ஒரு பெரியாருக்கு, தமிழ்த்தாயகம் அஞ்சலி செலுத்துகின்றது.

ஆனல் அவர் அவதரித்த ஈழத்திலே அவரைப் பற்றி நமக்கு அதிகம் தெரியாது. நமது பெருமை நமக்குத்தெரிவதில்லை. தமிழகத்தின் மூலமே ஸ்ரீ நாவலர்பெருமானின் பெருமையை நாம் உணர முடிந்தது. இலக்கண சுவாமியாரின் பெருமையையும், தமிழ் நாட்டைச் சேர்ந்த பலபெரியார்களும் அவர் காலமானதின் பிறகு அவரைப்போற்றி எழுதியதைப் படித்த பின்புதான் ஓரளவு உணர முடிந்தது.

பதினன்கு வயதிலே யாழ்ப்பாணத்தை விட்டுப் புறப்பட்டவர், மீண்டும் இங்கு திரும்பவேயில்லையாம். அவரை ஒருமுறையாவது வருமாறு அழைத்தும் அவர் சம்மதிக்கவில்லை. தமிழ் நாட்டிலே பல ஆதீனங்களிலும் தொடர்புகொண்டு அவர் செய்த தெய்வப் பணியையும் தமிழ்ப் பணியையும் பற்றிப் பல தமிழ்ப் பெரியார்கள் பாராட்டி எழுதியுள்ளதைப் படிக்கையில் பெருமையாகவுள்ளது.

வித்தியாலய அதிபர் அம்பிகைபாகன் அவர்கள் அவரைப் பற்றித் தொகுத்து வெளியிட்ட நூலை சென்னை ஆரோக்கிய ஆசிரமத்தார் பாராட்டிப் போற்றி ஒரு பரிசு வழங்கியுள்ளதாகச் சில வாரங்களுக்கு முன் தெரிவித்துள்ளனர். அப்பெரியாரின் அருளாசி தான் "ஈழநாடு" ஸ்தாபனத்துக்குப் பலமான அஸ்திவாரமாரமாகும் என்பதை நினைக்கையில் மகிழ்ச்சியும் இதன் எதிர்கால வளர்ச்சியைப் பற்றிப் பூரண நம்பிக்கையும் ஏற்படுவதாகவுள்ளது.

* * *

சென்னை கவர்னராக மைசூர் மகாராஜா பதவியேற்றதைச் சென்னைப் பத்திரிகைகளெல்லாம் விசேஷமாக வரவேற்று எழுதியுள்ளன. பதவிக்கேற்ற தோற்றம், அறிவும், ஆற்றலும், பக்தியும், பண்பும் மிக்கவர். பதவியேற்றதும் முதல்வேலையாக மைலாப்பூர் கபாலீசுவரர் கோயிலுக்கும், திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலுக்கும் சென்று ஒவ்வொரு சந்நிதியிலும் பக்தியுடன் சாஷ்டாங்கமாக விழுந்து கும்பிட்டாராம்!

தாம் தமிழ் படிக்கப்போவதாக அவர் தெரிவித்து, தமிழ் மக்களின் அன்பை முதல் நாளே அநேகமாகப் பெற்றுவிட்டார். கவர்னரின் அதிகாரங்கள் சட்டப்படி வரையறுக்கப்பட்டுள்ளன. என்ருலும் அவர் தமது செல்வாக்கைப் பயன்படுத்தி நல்ல சேவை செய்யலாம். அமெரிக்கா முதலிய வெளிநாடுகளுக்கெல்லாம் சென்று விரிவுரையாற்றியுள்ள அவரை இலங்கை அரசாங்கம் சீக்கிரத்தில் அழைத்தால், இரு தேசங்களுககும் நல்லுறவும பரஸ்பர அபிமானமும் வளர உதவுவதாகவிருக்கும். நல்லுறவு இருந்தால் எந்தப் பிரச்னையும் சுமுகமாகத் தீரலாமல்லவா?

* * *

ஐந்நூறு பேர்களுக்கு மேற்பட்ட அமெரிக்க காங்கிரஸ் சபையில் பெண் மெம்பர்கள் 35 பேர்தானும்! இதை ஓர் அமெரிக்கப் பெண்மணி கூறியதும், இது மிகக் குறைவென்

(மே பக்கம் பார்க்க)

காஷ்மீர் பிரச்னை

# பாதுகாப்புசபைக்கு வருமாறு ஷேக் அப்துல்லா அழைக்கப்பட வேண்டும்

## ஐ. நா. வில் புட்டோ கோரிக்கை

நியுயோர்க், மே 6

**பதினறு வருடங்களாக நீடித்துவரும் காஷ்மீர் பிரச்னை குறித்து ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் நேற்று மீண்டும் ஆரம்பமான விவாதத்தில் பாகிஸ்தான் சார்பில் கலந்துகொண்ட வெளிவிவகார மந்திரி திரு. புட்டோ உரைநிகழ்த்துகையில், பாதுகாப்புச் சபைக்கு முன் திரு. ஷேக் அப்துல்லா அழைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். இதுசம்பந்தமான இந்தியாவின் பதில் இன்றிரவு வெளியாகும்.**

பாகிஸ்தானின் கோரிக்கையைத் தொடர்ந்து ஆரம்பிக்கப்பட்ட காஷ்மீர் சம்பந்தமான விவாதம் நேற்றிரவு ஐ. நா. பாதுகாப்புச்சபையில்மீண்டும் ஆரம்பமானது. நேற்றிரவு பாகிஸ்தான் வெளிவிவகாரமந்திரி திரு. புட்டோ 90 நிமிடநேரம்வரை உரைநிகழ்த்தினர்.

திரு. புட்டோ பேசுகையில் 1948, 49-ம் ஆண்டில் இயற்றப்பட்ட ஐ. நா. சபைத் தீர்மானங்கள் இப்பொழுதும் செல்லுபடியாகுமென்றும் இத்தீர்மானங்களை ஒரு நாடு மீறினல் போர்நிறுத்த காலமும் கடந்ததாகவே கருதப்படும் என்றும் கூறினர்.

"இந்தியாவுடன் காஷ்மீர் இணைந்தது ஒரு தற்காலிகமானதே. இது தொடர்ந்திருக்குமென்று எதிர்பார்க்க முடியாது. இந்த இணைப்பு இப்பொழுது செல்லுபடியாகாது" என்றும் திரு. புட்டோ கூறினர்.

காஷ்மீரின் முன்னாள் பிரதமர் திரு. ஷேக் அப்துல்லா விடுதலை செய்யப்பட்டது மகிழ்ச்சிக்குரிய விஷயம். ஆனல் அவரை மீண்டும்கைது செய்வோம் என்று இந்திய அரசாங்கம் பயமுறுத்தி வருகிறது. ஜம்மு காஷ்மீர் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டுமென்று கோரும் திரு. ஷேக்அப்துல்லாவை உடனடியாக நியுயோர்க்குக்கு அழைத்து ஐ. நா. பாதுகாப்புசபையில் பேசுவதற்கு அனுமதியளிக்க வேண்டுமென்றும் திரு புட்டோ குறிப்பிட்டார்.

காஷ்மீர் பிரச்னை குறித்து திரு. ஷேக் அப்துல்லாவுடன் ஐ. நா. பொதுக் காரியதரிசி யுதாண்ட் பேச்சுக்கள் நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்ட திரு. புட்டோ காஷ்மீர் தகராற்றில் யுதாண்ட் தமது செல்வாக்கை உபயோகிக்க வேண்டுமென்றும் தெரிவித்தார்.

கூட்ட முடிவுக்குப் பின்னர் திரு. புட்டோ பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில்; ஸ்ரீநகரில், பல அசம்பாவிதமான சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன என்றும் காஷ்மீரில் பல இடங்களில் பிரகடனப்படுத்தப்பட்ட ஊரடங்கு சட்டங்களின் விளைவாக பொதுமக்களுக்கும் பொலிசாருக்குமிடையே கைகலப்பு ஏற்பட்டதென்றும் பொலிசாரின் குறுந்தடிப்பிரயோகத்தினல் பலர் காயமடைந்தனர் என்றும் கூறினர்.

ஐ. நா. வைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவிக்கையில், காஷ்மீர் பிரச்னையில் யுதாண்ட் தமது செல்வாக்கை உபயோகப்படுத்த வேண்டுமென்று புட்டோ தெரிவித்த கோரிக்கை குறித்து, யுதாண்ட் எந்தவித பதிலும் தெரிவிக்கவில்லையென்றும் இதுபற்றி அவர் இந்தியாவின் யோசனையை எதிர்பார்க்கிருர் என்றும் கூறினர்.

## பாக். விமானப் அத்துமீறல்

புதுடில்லி, மே 6

ஜம்மு, காஷ்மீர் மேலாக கடந்த மாதத்தின்போது பாகிஸ்தான் விமானங்கள் மூன்று தடவைகள் அத்துமீறிப் பறந்தனவென்று இந்திய பாதுகாப்பு மந்திரி திரு. சாவன் தெரிவித்துள்ளார்.

போர் நிறுத்தக் கோட்டையும் கடந்து பாகிஸ்தான் விமானங்கள் இந்தியப் பிரதேசத்தின்மீது பறந்து சென்றனவென்று தெரிவித்த திரு. சாவன், பாக். விமானம் ஒருதடவையில் இந்தியப் பிரதேசத்துக்குள் 8ப மைல்வரை அத்துமீறிப் பறந்ததென்றும் மற்றுமொரு விமானம் அத்துமீறிப் பறந்தபொழுது இந்தியப் போர் விமானங்கள் அதைத் துரத்திச் செல்லவே அந்த விமானம் திரும்பிவிட்டதென்றும் கூறினர்.

## வட ரொடீஷயா சுதந்திர தினம்

லண்டன், மே 6

வடக்கு ரொடீஷியா சுதந்திரம் பெறும் திகதி பற்றி முடிவுசெய்யும்பொருட்டு லண்டனில் மகாநாடொன்று நடைபெறுகின்றது. இந்த மகாநாட்டில் கலந்துகொண்டுள்ள வடக்கு ரொடீஷியப் பிரதமர் நேற்று உரை நிகழ்த்துகையில், ஐக்கிய நாடுகள் தினமான இவ்வருடம் அக்டோபர் மாதம் 24-ந் திகதியன்று வடக்குரொடீஷியா சுதந்திரம் பெறவேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளார்.

சுதந்திரம் பெற்றதும் வடக்கு ரொடிஷியா காமன்வெல்த்தில் ஒரு உறுப்பு நாடாக இருக்குமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## 'உள்விவகாரத்தில் வேறு நபர் தலையிடுவதைஇந்தியாவிரும்பாது,'

### நிருபர்களுக்கு சக்ளா பேட்டி

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபையில் நடைபெறும் காஷ்மீர் விவாதத்தில் இந்தியாவின் சார்பில் கலந்துகொண்ட கல்வி மந்திரி திரு. சக்ளா நேற்றிரவு நிருபர்களுக்கு அளித்த பேட்டி யொன்றில்; காஷ்மீர் பிரச்னையில் மத்தியஸ்த யோசனைக்கோ அல்லது வெளியாரின் தலையீடுகளுக்கோ இடமில்லை யென்றும் உள் விவகாரங்களில் வெளியார் தலையிடுவதை இந்தியா அனுமதிக்காதென்றும் கூறினர்.

இந்தியாவுடன் காஷ்மீர் இணைந்தது சட்டபூர்வமான— மறைக்கமுடியாத — மாற்றமுடியாத ஒரு உண்மை என்றும் திரு. சக்ளா குறிப்பிட்டார்.

"திரு. ஷேக் அப்துல்லா 1949-ம் ஆண்டில் ஐ. நா. பாதுகாப்புச்சபையில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டுள்ளார். இந்திய பிரதேசத்துக்குள் பாகிஸ்தான் எத்தனை தடவைகள் அத்துமீறியிருக்கின்றன என்பதையும், பாகிஸ்தானின் சட்டவிரோதமான நடவடிக்கைகளையும் ஐ. நா. சபைப் புத்தகத்தில் காணலாம். பாகிஸ்தானின் எல்லா நடவடிக்கைகளையும் ஐ. நா. பார்வையாளர்கள் அவதானித்துள்ளனர்." என்றும் திரு. சக்ளா தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் நேற்றிரவு திரு. புட்டோ பேசியதைத் தொடர்ந்து, சபைக் கூட்டம் இன்று இரவுவரை ஒத்திவைக்கப்பட்டது. இன்றிரவு இந்திய கல்விமந்திரி திரு. சக்ளா, பாகிஸ்தானின் குற்றச்சாட்டுகளுக்கும் கோரிக்கைகளுக்கும் பதிலளிப்பார்.

## "காஷ்மீரில் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு செய்துள்ளது"

— கிருஷ்ணமேனன்

இந்தியாவின் முன்னள் பாதுகாப்பு மந்திரி திரு. வி. கே. கிருஷ்ணமேனன் நேற்று புதுடில்லியில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் உரை நிகழ்த்துகையில்; காஷ்மீரில் பாகிஸ்தானே ஆக்கிரமிப்பு செய்திருக்கிறது என்று கூறினர்.

இந்தியாவின் உபகண்டத்தில் எந்த நேரமும் ஆபத்திருந்திருப்பதால் அங்கு பாதுகாப்பு வேலைகள் அதிகரிக்கப்படுவதுடன் துரிதமாகவும் நடைபெறவேண்டுமென்றும் அவர் கூறினர்.

"ஒரு ஜனநாயக நாட்டுடன் இராணுவ சர்வாதிகார நாட்டை ஒப்பிடுவது பொருத்தமாகாது. அதற்காக எப்பொழுதும் நாம் ஜனநாயக வழிகளைக் கடைப்பிடித்துவருவதும் ஆபத்தானது" என்றும் திரு. கிருஷ்ணமேனன் எச்சரிக்கைசெய்தார்.

## பாலத்துக்குக் கீழ் வெடித்த குண்டு

காகிநாடா, மே 6

சாமஸ்கோட்டை அருகில் ரயில் பாலத்தின் கீழ் வெடிகுண்டொன்று வெடித்ததில் ஒரு தொழிலாளியின் கட்டைவிரல் துண்டாகியது. பாலத்துக்குக் கீழே தோண்டும் வேலையில் சில தொழிலாளர்கள் ஈடுபட்டுக்கொண்டிருந்த பொழுதே இச்சம்பவம் ஏற்பட்டது.

ரயில்வே பாலத்தின் கீழ் மேலும் சில குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவை அங்கு எப்படி வந்தனவென்பது இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை.

## பௌத்த அகதிகள்

ஷில்லாங், மே 5

சிங்டகாங் மலைப்பகுதியிலிருந்து 13,000 பௌத்த அகதிகள் அஸாமுக்குள் வந்துள்ளனர்.

## மீண்டும் நேருவுடன் பேச்சு

சென்னை சென்று திரு. ராஜகோபாலாச்சாரியாருடன் பேச்சுக்கள் நடத்திய திரு. ஷேக் அப்துல்லா இன்று காலை புதுடில்லி வந்து சேர்ந்தார்.

ராஜாஜியுடன் திரு ஷேக் அப்துல்லா நடத்திய முன்னேற்றமான -சமரசமான பேச்சுக்களில் ஏற்பட்ட சில முடிவுகளை அவர், பிரதமர் நேருவிடம் இன்று தெரிவிப்பார்.

திரு. ஷேக் அப்துல்லா ராஜாஜியுடன் நடத்திய பேச்சுக்கள், இந்திய-பாகிஸ்தான் உறவுகளை வலுப்படுத்தக் கூடியதாகவிருக்கின்றன என்றும் இந்தப் பேச்சுவார்த்தைகளின்போது ஏற்பட்ட முடிவுகள் இரு நாடுகளுக்கும் நல்ல பலன்களைக் கொடுக்கலாமென்றும் பார்வையாளர்கள் அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பேச்சுக்களில் ஏற்பட்ட 'அந்த' முடிவுகளை வெளியிட மறுத்துள்ள திரு. ஷேக் அப்துல்லா, இன்று அல்லது நாளை இந்தியப் பிரதமர் நேருவைச் சந்தித்து இதுபற்றி பேச்சுக்கள் நடத்துவார். இதன் பின்னரே அந்த முடிவுகள் வெளியிடப்படுமென்று திரு. ஷேக் அப்துல்லா அறிவித்துள்ளார்,

நியுயோர்க்குக்கும் வேறு சில நாடுகளுக்கும் செல்வதற்கு 'பாஸ்போர்ட்' பெறுவதில் திரு. ஷேக் அப்துல்லா இப்பொழுது முயன்றுகொண்டிருக்கிருர் என்று வெளியான ஒரு செய்தியை அவர் மறுத்துள்ளார்.

## சூ-என்-லாய் பிறப்பித்த இரகசியக் கட்டளை

### நேரு விலகும்போது ஆயுத புரட்சிக்கு தயாராக வேண்டுமாம்!

புதுடில்லி, மே 6

இந்தியப் பிரதமர் திரு. நேருவின் வாரிசை தேர்ந்தெடுக்கும்போது, ஆயுதப் புரட்சியொன்று நடத்த மேற்கு வங்காளம், அஸாம், நாகலாந்து கம்யூனிஸ்டுகள் தயாராகவிருக்கவேண்டுமென்று மேற்கு வங்காள கம்யூனிஸ்டுகளுக்கு தலைமை எடுத்துச் செல்லவேண்டிய இந்திய கம்யூனிஸ்டான திரு. பாபுதாவுக்கு சீனப் பிரதமர் கட்டளையிட்டதாக பத்திரிகைச் செய்தியொன்று கூறுகின்றது.

கடந்த மாதம் "இல்போர்" என்ற இத்தாலியப பத்திரிகையில் வெளியான தொரு கடிதம் குறித்து இந்திய உள்துறை இலாகா கவனம் செலுத்திவருகிறது.

சீனப் பிரதமரின் ஆபிரிக்க சுற்று விஜயத்தின்போதுதான் இக்கட்டளை பிறப்பிக்கப்பட்டதாக அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆறு அல்லது பன்னிரண்டு மாதங்களில் இந்தியப் பிரதமர் இந்திய அரசியலிலிருந்து ஓய்வெடுக்கலாமென்று சீனர்கள் கருதுகின்றனராம்.

மேற் கூறப்பட்ட தகவலை வெளியிட்ட இத்தாலியப் பத்திரிகை மிகவும் நம்பகமானதென்றும் அப்பத்திரிகையில் வெளியாகும் செய்தி எதுவும் மறுக்கப்பட்டதில்லையென்றும் இத்தாலிய தூதரகம் அறிவித்துள்ளது.

ஆயுதப் புரட்சியைத் தூண்டிவிடும் ரகசியக் கடிதம், இராணுவப் பயிற்சியை ஆரம்பிக்குமாறு மேற்கு வங்காளத்தின் உண்மையான தோழர்களைக் கேட்டுக்கொள்கிறதென்றும் இதற்கு பணமும், ஆயுதமும் சீன வழங்கும் என்றும் அப்பத்திரிகை கூறுகிறது.

கிழக்கு இந்தியாவிலும், கிழக்குப் பாகிஸ்தானிலும் உள்ள எட்டுக் கோடி மக்களை வெல்லும் கம்யூனிஸ்ட் சீனவின் திட்டம் அக்கடிதத்தில் குருப்பாகச் சொல்லப்படுகிறது.

## தென் அராபிய குடியரசில் பிரிட்டன் மீண்டும் தாக்குதல்

### ஐ. நா. வில் அரபு நாடுகள் புகார்

ஏடன், மே 6

தென் அராபியக் குடியரசிலுள்ள பழங்குடியினரை பிரிட்டிஷ் துருப்புகள் நேற்று தொடர்ந்து தாக்கினர். இத்தாக்குதலில் கடுமையான சண்டைக்குப் பின்னர் பழங்குடியினர் பின்வாங்கினர் என்றும் சுமார் 5 பிரிட்டிஷ் துருப்புகள் மாண்டனர் என்றும் இருவர் காயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இச்சண்டைகள் யேமனுக்கு அருகே நடந்தது.

ஏடனுக்கு பிரிட்டிஷ் துருப்புகள் தொடர்ந்து அனுப்பப்படுகின்றனர். தற்பொழுது ஏடனில் 3,000 பிரிட்டிஷ் துருப்புகள் இருக்கின்றன.

பிரிட்டனின் இந்தவித நடவடிக்கைகள் குறித்து அரபுநாடுகள் பல ஐக்கியநாடுகள் சபையில் முறைப்பாடுகள் தெரிவித்துள்ளன. யேமனின் உள்விவகாரத்தில் பிரிட்டன் தலையிடுவதையும் யேமனில் அசம்பாவிதமான சம்பவங்கள் ஏற்படுவதையும் தவிர்ப்பதில் ஐ. நா. தலைமைக் காரியதரிசி ஈடுபட வேண்டுமென்று கோரி அரபுநாடுகள் பல யுதாண்டிடம் புகார் செய்துள்ளன.

இதற்கிடையில் ஐக்கிய அரபுக்குடியரசு சகல அரபுநாடுகளுக்கும் விடுத்த வேண்டுகோளில் அரபு மண்ணிலிருந்து பிரிட்டனை வெளியேற்ற வேண்டுமென்ற தமது தீர்மானத்துக்கு அரபுநாடுகள் எல்லாம் ஆதரவளிக்க வேண்டுமென்று கோரியுள்ளன.

ஐக்கியஅரபுக் குடியரசின் இந்த தீர்மானத்தைப் பல அரபுநாடுகள் அங்கீகரித்து ஆதரவளித்துள்ளது என்று ஒரு செய்தி கூறுகிறது.

## "மந்திரி பதவிகளை நிராகரித்தோம்"

அம்பாறை, புதன்

சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் உள்ள ஒரு குறிப்பிட்ட பகுதியினருக்கோ அல்லது முழுக் கட்சிக்குமே லங்கா சமசமாஜக் கட்சி ஆதரவு கொடுக்கவேண்டுமென்பது சமசமாஜக் கட்சியினல் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கையல்லவென்றும், திருமதி பண்டாரநாயக்கா சமசமாஜிகள் மூவருக்களித்த மந்திரிப் பதவிகள் நிராகரிக்கப்பட்டனவென்றும் இங்கு நடைபெற்ற ஐக்கிய இடதுசாரி முன்னணிக் கூட்டமொன்றில் சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த தொழிற்சங்கவாதியான திரு. எம். ஏ. மார்ட்டின்ஸ் என்பவர் தெரிவித்தார்.

# கல்லுண்டாயில் உப்பளம் அமைக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணத்துக்கும் அராலிக்குமிடையேயுள்ள கடற்கரையோரத்தில் உப்பளம் ஒன்று அமைக்க வலிகாமம் மேற்கு பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் திட்டமிட்டுள்ளது. இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருவதாக இந்த அபிவிருத்தித் திட்டத்தை இயக்கும் பிரமுகர்களில் ஒருவர் தெரிவித்தார்.

போதியளவு உப்பு எடுக்கக்கூடிய வாய்ப்பு இருப்பதாக ஆரம்ப பரிசோதனையில் காணப்பட்டதாகவும், இதனால் வலிகாமம் மேற்குப் பகுதியில் உள்ள பலருக்கு வேலை கிடைப்பதுடன் இப் பகுதியின் பொருளாதார வளர்ச்சிக்கும் இத் திட்டம் உதவுமெனவும் அந்தப் பிரமுகர் தெரிவித்தார்.

இந்த உப்பளத்திட்டத்தை ஆரம்பிப்பதினால் அயற் கிராமங்களில் உள்ள மக்களின் பொருளாதாரத்தில் எவ்வித பலாபலன்கள் ஏற்படும் என்பது பற்றி ஆராய்வதற்காக அண்மையில் நவாலியில் ஒரு கூட்டம் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் பேசுகையில் திரு. என். சிவநேசன் குறிப்பிட்டதாவது:-

தமிழர்களை இப்போது எதிர்நோக்கியுள்ள முக்கிய பிரச்னை பொருளாதாரப் பிரச்னையாகும். எனவே தமிழ் பகுதிகளில் உள்ள இயற்கை வளங்களை பயன்படுத்தி அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்கவேண்டியது மிகவும் அவசியமாகும். பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் திட்டமிட்டுள்ள உப்பளத்திட்டம் வரவேற்கக்கூடியதாகும். இந்த திட்டத்துக்கு அயற்கிராமங்களில் உள்ளவர்கள் தம்மாலியன்ற ஆதரவையும் கொடுக்கவேண்டும்.

இந்த திட்டத்தினால் சிலர் பாதிக்கப்படலாம்; ஆனால் நியாயமான முறையில் அவர்களுக்கு நஷ்டஈடு வழங்கவேண்டும். ஒரு சிலருக்கு மட்டும் நஷ்டம் ஏற்படுகின்றதென்பதற்காக மக்களில் பலருக்கு நன்மை விளைவிக்கும் ஒரு திட்டத்தை நிறுத்தி வைக்க முடியாது.

உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் பேசுகையில், உப்பள திட்டம் வரவேற்கக் கூடியதென்றும், விவசாயிகளை எந்த விதத்திலும் பாதிக்காத வகையில் இத் திட்டத்தை உருவாக்கவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

இத் திட்டத்தினால் அயற் கிராமங்களில் உள்ளவர்கள் எவ்விதம் பாதிக்கப்படுவார்கள் என்பதை மக்களுக்கு தெரியப்படுத்தும் பொருட்டு இந்த திட்டத்தை இயக்குபவர்களை அழைத்து ஒரு பொதுக்கூட்டம் நடத்த வேண்டும் என தீர்மானிக்கப் பட்டது.

—

## சங்கானை பட்டின சபை

கொழும்பு, வியாழன்

சங்கானை வெளியூர் வாசிகள் சங்கத்தினர் சங்கானை பட்டின சபை பல மாதங்களுக்குமுன்னர் கலைக்கப்பட்டதை யிட்டு ஸ்தலஸ்தாபன அதிகாரியை பேட்டி கண்டு விரைவில் பட்டினசபைத் தேர்தல் நடத்துமாறு கேட்கவேண்டுமென்ற தீர்மானம் சென்ற கிழமை நடந்த பொதுக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

சங்கானை பட்டினசபை எல்லைக்குள் ஒரு பொது நூல்நிலையம், விளையாட்டு மைதானம், கல்லூரி விஸ்தரித்தல் போன்ற பொது விஷயங்களும் சபையினரால் ஆராயப்பட்டது.

REGAL — JAFFNA
NOW SHOWING
Daily 3Shows. Sats.&Suns. Four
Audrey Hepburn
Shirley Maclaine
in
The Loudest Whisper
(ADULTS ONLY)

சினிமாஸ் திரைகளில்
அடுத்த திரை விருந்து
எஸ். எஸ். ராஜேந்திரன் — விஜயகுமாரி
மற்றும் பலர் நடித்த
நானும் ஒரு பெண்
தென்னாட்டில் 125 நாட்களுக்கு மேல்
ஓடிய உன்னத தமிழ் திரை விருந்து

கிங்ஸ்லி பிளாஸா வெலிங்டன்
(கொழும்பு) (வெள்ளவத்தை) (யாழ்ப்பாணம்)



எம். ஜி. ராமசந்திரன்—பி. சரோஜாதேவி
நடித்த
பெரிய இடத்துப் பெண்

# நேருமீது ஆர். ஜி. குற்றச்சாட்டு

பதுளை, புதன்

"இலங்கையில் உள்ள இந்தியர்களை இந்தியாவுக்கு திரும்ப அழைத்து நேரு தமது வாக்குறுதியைக் காப்பாற்ற வேண்டும்" என்று தம்பதேனியா எம். பி. திரு. ஆர். ஜி. சேனநாயக்கா இங்கு நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. நேரு தாம் எழுத்தில் கொடுத்த வாக்குறுதியை இதுவரை காப்பாற்றவில்லையென்றும் குறைகூறிய திரு. சேனநாயக்கா, நேரு இனிமேலும் இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதில் இப்போது காட்டிவரும் போக்கிலேயே காணப்பட்டால் இலங்கை வேறுவிதமான கட்டாய நடவடிக்கைகளில் இறங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் எனவும் எச்சரித்தார்.

திரு. சேனநாயக்கா மேலும் குறிப்பிட்டதாவது:

இந்தப் பிரச்னை சம்பந்தமாக இந்தியாவுடன் சண்டைபிடிக்க நாம் விரும்பவில்லை. இலங்கை கடைப்பிடித்து வரும் நடுவழிப்பாதை சகல மக்களிடையேயும் நல்லெண்ணம் வளர வேண்டுமென்ற நோக்கமுடையது. நாம் திரு. நேருவைக் கேட்பதென்னவெனில் அவர் தமது வாக்குறுதியைக் காப்பாற்றும்வகையில் இந்தியர்களை இந்தியாவுக்கு அழைக்க வேண்டும் என்பதேயாகும். அப்படிச் செய்தாலே நாம் நமது நாட்டை அபிவிருத்தி செய்ய முடியும்.

—

## மந்திரி தன்னைப்பற்றி கூறுகிறார்...

கொழும்பு, புதன்

பொறாமை, வெறுப்பு, சதியாலோசனை முதலிய சூழல்கள் இலங்கையில் மலிந்து விட்டன. ஒவ்வொருவரைப் பற்றி உண்மையற்ற வதந்திகளையும் புரளிகளையும் மற்றவர்கள் கிளப்பிவிடுவது வெகு சகஜமாகிவிட்டது. எனது கொள்கைகள் தீர்மானங்கள் என்பவற்றை தமக்குச் சாதகமாக மாற்றுவதற்காக பலரும் தவறான வழியில் தமது செல்வாக்கைப் பிரயோகித்ததுமுண்டு. இருப்பினும் நான் யாருக்குமே வளைந்து கொடுத்ததில்லை. எனது கொள்கைகள் தீர்மானங்கள் சுதந்திரமானவை; நேர்மையானவை. அவை மற்றவர்களது நலன்களைப் பாதிக்கின்றனவா அல்லவா என்பதை நான் ஒருபோதும் கவனிப்பதில்லை." இவ்வாறு சுகாதார அமைச்சர் ஜனாப் பதியுதீன் மாமூத், டாக்டர் கருணாரத்தினவுக்கு அரசினர் அப்போதிக்கரிமார் சங்கம் அளித்த பிரிவுபசாரத்தில் பேசுகையிற் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

"என்னை விளங்கிக்கொண்டவர்களை விட என்னைத் தவறாகப் புரிந்துகொண்டவர்கள் தான் அதிகம். நான் எவருக்கும் கெடுதி விளைவிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் எதையும் செய்தது கிடையாது. டாக்டர்கள் தனிப்பட்டமுறையில் கடமையாற்றுவதைத் தடுக்கவேண்டுமென்று கோரியவர்கள் மக்கள். மக்கள் பிரதிநிதி என்ற வகையில் அதை நிறைவேற்றிவைத்தவன் நான். இது மக்களினது ஏகோபித்த வேண்டுகோள் என்பதற்கு எல்லா அரசியற் கட்சிகளும் எனது இந்தத் தீர்மானத்தை ஆதரித்ததே போதிய சான்றாகும்".

—

## என்ஜினியர் திடீர் மரணம்

கொழும்பு, புதன்

மாவட்ட நீர்ப்பாசன என்ஜினியர் திரு இ. அம்பலவாணர் சடுதியாக ஏற்பட்ட மாரடைப்பினால் சென்ற ஞாயிற்றுக் கிழமை காலமானார். இறப்பதற்கு முதல் நாள் தனது பிள்ளைகளை விடுமுறைக்குப் பின்னர் யாழ்ப்பாணம் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பியிருந்தார்.

ஜூன் 1-ந் திகதி தொடக்கம் திரு. அம்பலவாணர் நீர்ப்பாசன கந்தோரில் வேறு உயர்ந்த பதவிக்கு நியமிக்கப்பட்டிருந்தார்.

# "இருவரையும் அகற்றுவதாக பிரதமர் என்னிடம் கூறினார்"

## பிலிப் குணவர்த்தன அறிக்கை

கொழும்பு, புதன்

"காலிமுகக் கடற்கரை மைதானத்தில் நிகழ்ந்த இடதுசாரி ஐக்கிய முன்னணியின் மேதினக் கூட்டத்தில் யான் பேசும்போது தெரிவித்த சில கருத்துக்களை எதிர்த்து பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பத்திரிகைகளுக்கு ஓரறிக்கை விட்டிருப்பதைப் பார்த்தேன். திருவாளர்கள் சி. பி. டி' சில்வா, மைத்திரிபால சேனநாயக்கா குறித்து அந்த அறிக்கையிலே நான் தெரிவித்த கருத்துக்கள் தெளிவானவையும் இரட்டை அர்த்தத் தொனியற்றவையுமாகும்." என்று திரு. பிலிப்குணவர்த்தன நேற்று முன்தினம் பத்திரிகைகளுக்கு விடுத்த ஓர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:—

"மேற் குறித்த இரண்டு மந்திரிகளும் அரசாங்கத்தில் இடம்பெறும்வரை இடதுசாரி முன்னணியின் எந்தவிதமான ஆதரவும் அரசாங்கத்துக்குக் கிடைக்கமாட்டாதென்பதை திட்டவட்டமாகவே பிரதமருக்கு நான் தெரிவித்தேன். மார்ச் மாதம் 8-ந் திகதி பிரதமருடன் நான் பேச்சுவார்த்தை நடத்தியபோது திருவாளர்கள் சி. பி. டி. சில்வாவையும், மைத்திரிபால சேனநாயக்காவையும் புதிய மந்திரிசபையிற் சேர்த்துக்கொள்ளும் உத்தேசம் தமக்கு அறவே கிடையாதென்று பிரதமர் கூறியது முற்றிலும் உண்மையாகும்.

மார்ச் மாதம் 8-ந் திகதிக்குப் பின் பிரதமரது கருத்துக்களில் மாற்றங் காணப்படுவதற்குக் காரணம் என்ன என்பதைத்தான் என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. இந்த எனது அறிக்கையிற் காணப்படும் விஷயங்கள் அத்தனையும் முழுக்க முழுக்க உண்மையானவையாகும்".

# திருக்குறள் மகாநாடு கரணவாயில் நடைபெறும்

கொழும்பு, புதன்

தமிழ் மறைக் கழகத்தின் 12-வது திருக்குறள் மகாநாட்டை சிறப்புற நடத்துவதற்கு கரணவாய் இளைஞர் முன்னேற்றக் கழகத்தினர் முயற்சி செய்து வருகின்றனர். மகாநாடு மே மாதம் 24, 25, 26-ம் நாட்களாகிய ஞாயிறு, திங்கள், செவ்வாய்க் கிழமைகளில் கரணவாய் உபதபாற் கந்தோருக்கருகாமையில் அமைக்கப்படும் பூதன் தேவனார் அரங்கில் நடைபெறும்.

தமிழ் மறைக் கழகத் தலைவர் திரு. கா. பொ. இரத்தினமும் பாராளுமன்ற உறுப்பினர் திரு. மு. சிவசிதம்பரம், சேர். கந்தையா வைத்தியநாதன் ஆகியோர் விழாவுக்கு தலைமை தாங்குவார்கள்.

### கருத்தரங்கு

வள்ளுவர் வைதிக நெறியைத் தழுவியவரா? தமிழ் நெறியைத் தழுவியவரா என்பது பற்றி பத்து அறிஞர்கள் சொற்போர் நிகழ்த்துவர். முதலியார் சின்னத்தம்பி, வித்வான் கார்த்திகேசு, திரு. புதுலோலன், செல்வி சற்சொருபவதிநாதன், திரு. நாவேந்தன், திரு. ஈழவேந்தன், திரு. இ. சங்கரப்பிள்ளை, முதலானோர் மூன்றும் நாள் நடைபெறும் இக்கருத்தரங்கில் பங்கு பற்றுவர்.

### கவியரங்கு

வள்ளுவர் போற்றும் பண்புகள் என்பது கவியரங்கின் பொருளாகும். இரண்டாம் நாள் நடைபெறும் இக்கவியரங்கில் பங்கு கொள்ள திரு. இ. அம்பிகைபாகன், திரு. தில்லைச்சிவன், திரு. இ. நாகராசன், திரு. பூ. செல்லையா, திரு. செ. கதிரேசர் பிள்ளை, யாழ்ப்பாணன் முதலானோர் இசைந்துள்ளனர்.

### உரை அரங்கு

பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, திரு. ச. தனஞ்சயராசசிங்கம் திரு. நீ. மே. யோ. வேதநாயகம், பண்டிதர் ஆர். கே. முருகேசு, திருமதி சத்தியதேவி துரைசிங்கம் முதலானோர் உரை நிகழ்த்துவார்கள்.

இசைநிகழ்ச்சிகளும், நாடக, நடன நிகழ்ச்சிகளும் மகாநாட்டில் இடம்பெறுமென அறிவிக்கப்படுகிறது.

## வட்டியில்லாத கடனுதவி

கொழும்பு, புதன்

சீனா இலங்கைக்குக் கடனாக வழங்கியுள்ள 50 லட்சம் ரூபாவுக்கும் வட்டி வாங்குவதில்லை என முடிவு செய்துள்ளது. கடன் வழங்கப்படும்போது இரண்டரை வீத வட்டி செலுத்த இலங்கை அரசாங்கம் இணங்கி இருந்தது.

சீன அரசாங்கத்தின் இந்தத் தீர்மானம் இலங்கை அரசாங்கத்துக்குத் தெரியப்படுத்தப் பட்டுவிட்டதென்றும் சீனப்பிரதமர் திரு. சூ-என்-லாய் ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்தபோதே அந்த நாடுகளின் பின்தங்கிய நிலையை நேரில் கண்டு இத்தகைய வட்டியற்ற கடன் உதவி புரிய முடிவு செய்தாரென்றும் சீன அரசாங்கம் விடுத்தசெய்தி ஒன்று கூறுகின்றது.

சீனப்பிரதமர் சூ-என்-லாய் சர்வதேச மகாநாடுகள் கூட்டுவதற்கான மண்டபம் ஒன்றையும் கொழும்பில் நிறுவித்தர முன்வந்துள்ளார் என்றும் அச் செய்தி கூறுகிறது.

—

## சமூக இன்சூரன்ஸ் திட்டம்

கொழும்பு, புதன்

சமூக இன்ஸூரன்ஸ் திட்டமொன்றை அமுலாக்குவது பற்றி இன்ஸூரன்ஸ கூட்டுத்தாபனத்தின் டைரக்டர் திரு. நிசங்க விஜயரத்தின ஆராய்ந்து வருகிறார். உத்தேசத்திட்டம் அமுலாக்கப்படுமானால் இந்தக் கூட்டுஸ்தாபனத்தில் உறுப்பினராயுள்ளவர்களுக்கு இலவச வைத்திய உதவிகள், அத்தியாவசிய சேவைகள் ஆகியவை இலவசமாக அளிக்கப்படுமென நம்பப்படுகிறது.

—

## மிந்திரன் இளைஞர் கழகம்

கொழும்பு, புதன்

மிந்திரன் இளைஞர் கழகச் செயற்குழுக் கூட்டம் சென்ற வாரம் நடைபெற்றபோது, மிந்திரன் அம்மன் கோவில் வசந்த மண்டபக் கட்டட விஷயமாக தீவிர நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்றும், இக்கழகத்தின் சார்பில் மாதமிருமுறை "தமிழர்களின் எதிர்காலம்" என்ற தலைப்பில் பிரபல கல்விமான்களாலும், எழுத்தாளர்களாலும் சொற்பொழிவுகள் நடாத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டதாக பொதுச் செயலாளர் திரு. வி. கே. தம்பி தெரிவித்துள்ளார்.

## இஸ்லாமிய பேச்சுப்போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் முஸ்லிம் சன சமூக நிலைய மாணவர்களிடையே நடத்தி வந்த இஸ்லாமியக் கலைப் போட்டிகள் சென்ற ஞாயிற்றுக் கிழமையுடன் முடிவடைந்தன.

முஹர்ரம் தினமாகிய எதிர் வரும் 14-ம் திகதி மாலை இப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கும் அன்று அதிகாலை 6 மணிக்கு நடைபெறும் மரதன் ஓட்டப் போட்டியில் வெற்றியீட்டுபவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்படும்.

போட்டி முடிவுகள் வருமாறு:

**பேச்சுப் போட்டி**

பிரிவு ஏ: எம். எம். மஹ்றூப், செல்வி ஏ. ஆர். ஸக்கூரு, செல்வி எம். எஸ். லமீக்கா.

பிரிவு பி (ஆண்கள்): எஸ். எம். மஹ்ஸூக், எம். வை. எம். சுபைர், ஏ. ஆர். எம். ஹஸன் முஹிதீன்.

**இஸ்லாமியப் பேச்சுப் போட்டி**

பிரிவு பி (பெண்கள்): ஏ. றயீஸா, எம். ஸலீமா, எஸ். ஸமீனு

பிரிவு ஸி (ஆண்கள்): எஸ். எம். முஹ்தார், எம். டி. மூகம்மது இஸதீன், எம். எஸ். எம். ஸலீம்கான்.

**திருக்குர் ஆன் மனனப் போட்டி**

பிரிவு ஏ: செல்வி ஏ. நிலூபர், செல்வி ஏ. ஆர். ஸக்கூரு, செல்வன் எம். ருஸீக்.

பிரிவு பி (ஆண்கள்): எம். எம். எஸ். அப்துல்காதர்.

பிரிவு பி (பெண்கள்): ஏ றயீஸா, ஏ. தமீமா.

---

## வானொலிநிகழ்ச்சிகள்

### வியாழன் 7-5-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 சிறுவர் மன்றம், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 கிளாரினெட், 7-00 பேச்சு — நாடும் நாமும், 7-15 நேயர்விருப்பம், 7-45 தொடர் நாடகம் — "மட்டக்களப்பு மாப்பிள்ளை" — எஸ். பொன்னுத்துரை எழுதியது, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 கவிக்கோவை, 10-00 நிலைய ஒலிப் பதிவுகள்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15) பகல் 2-00, இரவு 7-15,

காலை 6-30 மங்களஇசை, 6-50 வாத்தியஇசை, 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப் பாடல்கள், 7-30 துதிப்பாடல்கள் — காஞ்சிபுரம் ஏ. விநாயக முதலியார்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 திரைப்பட இசை, 1-30 வாத்தியஇசை, 1-50 குரலிசை, 2-10 ஹெச். எஸ். மத்வாச்சார் — கோட்டு வாத்தியம், 2-40 ஜெயபேரிகை.

மாலை 5-15 துதிப்பாடல்கள், 5-45 ஆகாஷ்வாணி ஒலிப்பதிவுகள்.

இரவு 6-20 கிராமநிகழ்ச்சிகள், 7-30 சமயங்கள் தந்த பயன்கள், 7-45 ராகம், தானம், பல்லவி — மதுரை மணிஐயர் — பாட்டு, 8-40 குரல்இசை — பி. லீலா, 9-15 சுபத்தசங்கீதம், 9-30 அகில பாரத நாடகநிகழ்ச்சி — தாகூர் எழுதிய 'கோரா'.

---

# 'ஈழநாடு' வெற்றிக்கிண்ண கைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், வியா

'ஒலிம்பிக் விளையாட்டுக் கழகம்' நடத்தும் 'ஈழநாடு' வெள்ளிக்கிண்ணத்துக்கான கைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியை இம்முறையும் நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன, "ஈழநாடு" வெள்ளிக்கிண்ணத்துக்கான இக்கைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி 'ஏ' பிரிவு: பழைய முறை பந்தாட்டம், 'பி' பிரிவு: பழைய முறை பந்தாட்டம், 'சி' பிரிவு: புதிய முறைப் பந்தாட்டம் என்று மூன்று பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளன. இந்தச் சுற்றுப் போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் கழகங்கள் தங்களது சேர்வுப் பத்திரங்களை மே மாதம் 10-ந் திகதிக்கு முன்னர் ஒலிம்பிக் விளையாட்டுக் கழக காரியதரிசிக்கு பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்கவேண்டும். அனுப்பவேண்டிய விலாசம்: சி. எஸ். சண்முகராஜா, யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை.

இச்சுற்றுப்போட்டியில் பங்குபற்றும் விளையாட்டு வீரர்கள் அந்தந்த மாகாணங்களில் தொடர்ச்சியாக ஆறு மாதங்களுக்குக் குறையாமல் வசித்திருக்கவேண்டும். இந்த ஆறு மாதகாலமும் விளையாட்டு முடிவு திகதியிலிருந்து கணக்கிடப்படும். ஆனால் இச்சட்டம் அரசாங்க ஊழியர்களுக்கு விதிவிலக்காகக் கொள்ளப்படும். இவ்விதியை மீறுபவர்கள் போட்டியில் கலந்துகொள்ள தகுதியற்றவர்களாகக் கணிக்கப்படுவர்.

இக்கைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இறுதி விளையாட்டைத் தவிர்ந்த மற்றைய விளையாட்டுகள் ஒலிம்பிக் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும்.

---

பத்திரிகை சுதந்திரத்தை

# கட்டுப்படுத்துவதால் சோஷலிஸம் ஏற்படாது

## கமிஷன் முன் முன்னாள் மந்திரி சாட்சியம்

கொழும்பு, புதன்

பத்திரிகை சுதந்திரத்தினால் வரும் கெடுதல்களையும் தீமைகளையும்விட பத்திரிகைகளை கட்டுப்படுத்துவதன் மூலம் அதிகமானதும் மிகப் பெரியவையுமான கெடுதல்கள் ஏற்படும் என்று பத்திரிகைக் கமிஷன் முன் உடரட்ட சாகித்திய பெரமுனையின் சார்பில் சாட்சியமளிக்கையில் முன்னால் தபால் மந்திரியான திரு. வி. ஏ. எஸ். மரைக்கார் தெரிவித்தார். பத்திரிகைச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தக் கூடாதெனக் கூறிய அவர் தமது சங்கத்தின் சார்பில் மகஜர் ஒன்றை சமர்பிக்கு முன்னர் பத்திரிகைச் சுதந்திரம் பற்றி காலஞ்சென்ற திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா 1957-ம் ஆண்டில் புதுடில்லியில் நடைபெற்ற காமன்வெல்த் பத்திரிகையாளர் மகாநாட்டில் நிகழ்த்திய உரை பற்றிக் குறிப்பிட்டார்.

திரு. மரைக்கார் மேலும் தெரிவித்ததாவது:-

ரஷ்யாவிலும், சீனாவிலும் இருந்துவரும் செய்திகளை பிரசுரிப்பதாலும், பத்திரிகை உடமையாளர்களிடமிருந்து பத்திரிகையின் கட்டுப்பாட்டை தளர்த்தி அரசாங்கம் பத்திரிகை சுதந்திரத்தை கட்டுப்படுத்துவதாலும் இலங்கையில் சோஷலிஸம் ஏற்பட்டுவிடாது. இதனால் முதலாளிகள் முதலாளிகளாகவே இருந்துகொண்டு வேறுவிதமான தொழில்களில் ஈடுபடவே இதுமேலும் வாய்ப்பளிப்பதாக உள்ளது.

பத்திரிகைகள் வெறும் செய்தி ஸ்தாபனங்கள் மட்டுமல்ல. ஒருவர் மீது ஒருவர் கண்டனம் தெரிவித்துக்கொள்ளவும், சமூகத்தினருக்கு ஒரு உத்தேச அரங்காகவும் பத்திரிகைகள் விளங்குகின்றன. பத்திரிகை சுதந்திரமில்லாவிடில் அறிவின் அம்சமாகிய சிந்தனைச் சுதந்திரம், அதன் வாயிலாக அறிவு வளர்ச்சி, கலாச்சார வளர்ச்சி, அரசியல் உரிமைகள் ஆகியவற்றை மக்கள் அனுபவிக்கமுடியாது. ஜனநாயகத்தை பாதுகாப்பதும் பத்திரிகைச் சுதந்திரமே. மக்களால் தெரிந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளைக்கொண்ட அரசாங்கத்தில் ஊழலும், நிர்வாகக்கேடும் மலியும்போதும் அரசாங்கத்தைச் சேர்ந்த பொது மக்களை நசுக்கி ஒதுக்கும் வேளைகளிலும் அவற்றை வெளிப்படையாகக் கூறி மக்கள் நலனைப் பாதுகாக்கவும் பத்திரிகைச் சுதந்திரம் உதவுகின்றது.

பத்திரிகை கமிஷன் சிபார்சு செய்யும் பத்திரிகை மீதான கட்டுப்பாடு ஜனநாயக அடிப்படையில் அமையவேண்டும் என எமது பெரமுனை விரும்புகிறது. பத்திரிகைச் சுதந்திரத்தை மேலும் கட்டுப்படுத்தாமல் மேலும் விஸ்தரிக்கக்கூடிய வகையிலேயே பத்திரிகைக் கவுன்ஸில் நிறுவப்படவேண்டும் எனவும் நாம் விரும்புகிறோம். பத்திரிகை கவுன்ஸில் கடமையை செவ்வனே செய்ய தவறும்போது நீதிமன்றம் சட்டபூர்வமாக பத்திரிகைகள் மீது நடவடிக்கை எடுக்க வகை செய்யப்படவேண்டும். ஒரு கம்பனி ஒரு பத்திரிகையை மட்டுமே வெளியிட அனுமதிக்க வேண்டும்.

அரசியல் கண்டனம் கொலைகள், தற்கொலைகள், போன்றவை பத்திரிகைகளில் அவை பற்றி செய்தி வெளியிடுவதால் அதிகரிக்கவில்லை. எமது நாட்டின் முன்னேற்றத்திலும் வாழ்க்கையிலும் புதுப்புது மாற்றங்கள் நிகழ்ந்தே இவற்றுக்குக் காரணம். பத்திரிகைகள் இவ்வித நிகழ்ச்சிகளை படம் பிடித்துக் காட்டுகின்றனவே ஒழிய அவற்றால் இவை அதிகரிக்கின்றன என்பது தவறாகும்.

---

### காஷ்மீர் . . .

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

'இந்தப் பேச்சுக்கள் குறித்து இப்பொழுது எந்தவித அபிப்பிராயமும் தெரிவிப்பது நல்லதல்ல. உரிய சந்தர்ப்பம் விரைவில் வந்துவிடும். அப்பொழுது எல்லாம் விபரமாக வெளியிடப்படும்" என்றும் பிரதமர் நேரு குறிப்பிட்டார்,

பார்லிமெண்டில் தெரிவிக்காமல் திரு. ஷேக் அப்துல்லாவுடன் எந்தவித உடன்பாடும் செய்துகொள்ளப்பட மாட்டாது என்றும் பிரதமர் நேரு அறிவித்தார்.

---

# சிறைச்சாலைகளில் இடநெருக்கடி!

## சிறைக்கமிஷனரின் நிர்வாக அறிக்கை தரும் தகவல்

கொழும்பு, புதன்

சிறைச்சாலைகளில் அளவுக்கு மதிகமாக குற்றவாளிகளை அடைத்து வைத்திருப்பதால், சிறைச்சாலைகளில் குற்றவாளிகளை நடத்தும் முறைபற்றிய சில அடிப்படை விதிகளை அனுசரிக்க முடியாமலிருக்கின்றது என்று சிறைச்சாலைக் கமிஷனர் திரு. எப். டி. எவ். ரத்னயக்கா தமது நிர்வாக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

நேற்று வெளியிடப்பட்ட சிறைச்சாலை கமிஷனரின் நிர்வாக அறிக்கையில், கமிஷனர் மூன்று முக்கிய விஷயங்கள் குறித்து குறிப்பிட்டுள்ளார். இடநெருக்கடியுடன் மற்றைய இரு விஷயங்களும் வருமாறு:

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்கள் மீது நீண்ட காலத்துக்கு விளக்கமறியலில் வைக்கப்படுகிறார்கள்.

சிறைக் கைதிகளின் மொத்தத் தொகையில் 42 சத விகிதத்தினர் அபராதத் தொகையை கட்ட மறுத்துச் சிறை கைதிகளாக இருப்பது.

அநுராதபுரம் புதிய நகர்ப் பகுதியில் சிறைச்சாலை அமைப்பதற்கென 50ஏக்கர் நிலம் அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்டுள்ளது என்றும் அங்கு சிறைகூடம் நிறுவப்பட்டபின்னர் சிறைச்சாலையின் இடநெருக்கடி பற்றிய பிரச்னை தீர்ந்துவிடும் என்றும் 207 கைதிகள் 12 மாதம் வரையிலும், 117 கைதிகள் 18 மாதம் வரையிலும், 22 கைதிகள் 2 வருடம் வரையிலும், 4 கைதிகள் 2 வருடத்துக்கு மேலும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள் என்றும் தமது நிர்வாக அறிக்கையில் சிறைக் கமிஷனர் தெரிவித்துள்ளார்.

---

### சீமெந்து . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விண்ணப்பிப்பவர்கள் கனிஷ்ட பாடசாலைத் தராதரப்பத்திரம் அல்லது அதற்குச் சமமான தகைமை, அல்லது உயர்வகுப்புப் பரீட்சைத் தகைமையுள்ளவர்களாயிருப்பதோடு நன்கு கணிக்கப்பட்ட தொழில் நுட்பப் பயிற்சிக் கழகத்தில் 2 வருட அடிப்படைப் பயிற்சியை திறமையாக நிறைவு செய்தவர்களாகவும் இருக்கவேண்டும்.

கனிஷ்ட தொழில் நுட்ப பாடசாலையில் இறுதிப் பரீட்சையின் முடிவை எதிர்பார்ப்பவர்களும் தொழில் நுட்பப் பயிற்சி பெற விண்ணப்பிக்கலாம். இம்மாதம் 23-ந் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

---


## கச்சாய் கிராமசபை

**கேள்வி விளம்பரம்**

சாண்டாம்போக்கட்டி தெற்கு அரசினர் நன்கொடை றோட்டு வேலைக்கான கேள்விப் பத்திரம் 20-5-1964 புதன்கிழமை காலை 10 மணி வரை கச்சாய் கிராமசபைக் கந்தோரில் எம்மால் ஏற்றுக் கொள்ளப்படும்

19-5-1964 முற்பகல் 12 மணிக்கிடையில் ரூபா 75-00 கட்டிக் கேள்விப்பத்திரம் பெறவேண்டும். இக்கட்டுப் பணத்தில் கேள்விப்பத்திரப் பணமாகிய ரூபா 25-00 திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

முழு விபரங்களையும் கச்சாய் கிராமசபைக் கந்தோரில் கந்தோர் நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

(ஒப்பம்)

அ. த. சிதம்பரபிள்ளை,
கச்சாய் கிராமசபைத் தலைவர்.
அலுவலகம்,
கச்சாய் கிராமசபை,
கொடிகாமம்,
5-5-1964. 354

---

## வரி விளம்பரம்

**கபிரியேல் தயாரிப்புகள்**

1. **கபிரியேல் பெயின் ஓயில்** சகல நோவு, வீக்கம்,வாதம் எதையும் குணமாக்கும். இன்னும் மாடுகளுக்கேற்படும் மேற்படி ரோகங்களும் குணமாகும்.
2. **கபிரியேல் ஓயின்மென்ற்** சகல அவியல், புண், கட்டு எதையும் ஆற்றும் ஒரே புண் களிம்பு.
3. **கபிரியேல் ஸ்பெஷல் பாம்** தடிமன், தலையிடி, சந்துளி போன்ற எல்லா வேதனைகளையும் தணிக்கவல்லவிசேஷ பாம்.

தயாரிப்பாளர்கள்.
GABRIELS, Chunnakam. 273

---

**தொய்வு, நீரிழிவு**

குணப்படுத்த உத்தரவாதம். மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனாம். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50. நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.

**வைத்தியர் பரிபூரணானந்தர்,** கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.


---

# பட்டினசபை உபதலைவர் தெரிவு; அட்டோர்னி ஜெனரலிடம் யோசனை

நல்லூர், வியாழன்

காங்கேசன்துறைப் பட்டினசபை உபதலைவர் தெரிவு சம்பந்தமாக உள்ளூராட்சி அதிகார சபை அட்டோர்னி ஜெனரலின் ஆலோசனையை நாடியுள்ளதாகத் தெரிகிறது.

கடந்த வருட இறுதியில் பட்டினசபையின் புதுவருட உபதலைவராக திரு. சு. கிருபாமூர்த்தி தெரிவு செய்யப்பட்டார். கடந்த இரு மாதங்களுக்குமுன் திரு. கிருபாமூர்த்தி மீது நான்கு உறுப்பினர்கள் கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதனைத் தொடர்ந்து புதிய உபதலைவராக திரு. க. வைத்திலிங்கம் தெரிவு செய்யப்பட்டார்.

புதிய உபதலைவர் தெரிவு சம்பந்தமாக பட்டினசபை வடபகுதி உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அறிவித்ததும், உதவி ஆணையாளர் பட்டினசபையிடம் விளக்கம் கேட்டிருந்தார். பட்டினசபை அவருக்கு அனுப்பிவைத்த விளக்கத்தில் 'பட்டினசபையின் உப தலைவரை சபையின் உறுப்பினர்களே தெரிவு செய்வதனால் அவரைப பதவியிலிருந்து நீக்குவதற்கு அவர்களுக்கு அதிகாரம் உண்டு' என்று தெரிவித்துள்ளது.

இது சம்பந்தமாக உள்ளூராட்சி அதிகாரசேவை அமைச்சர் மூலமாக அட்டோர்னி ஜெனரலின் ஆலோசனையைப் பெற முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது.

பட்டினசபை விதிகளில் உபதலைவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றுவதுபற்றி எந்தவிதமான குறிப்பும் இல்லாமையே இப்போது பிரச்னையை உருவாக்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

---

### தமிழாசிரியர் சங்க.,

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கும் வழங்கவேண்டும்.

தமிழ்ப் பாடசாலைகளின் நிர்வாகமொழி தமிழாக இருக்கவேண்டும்.

தராதரப்பத்திர ஆசிரியர்களுக்குத் தகுதியான சம்பளம் கொடுக்கப்படவேண்டும்.

அதிபர் பதவிகளை தமிழாசிரியர்களுக்கும் வழங்கவேண்டும்.

தாமதமின்றி பதவி உயர்ச்சி கொடுக்கவேண்டும்.

கல்வி நிர்வாகங்களில் ஆசிரியர்களுக்கும் பங்கு வேண்டும்.

ஆசிரியசேவைக்குத் தனியே கமிஷன் அமைக்கப்படவேண்டும்.

தேசியக் கல்வி முறையில் நியாயம் வழங்குக.

ஒழுங்கீனங்களை விசா[illegible] கமிஷன் நியமிக்குக.

தமிழாசிரியர் சங்க[illegible] கோரிக்கைகளை பொ[illegible] ளுக்கும் ஏனைய ஆசிரிய[illegible] கும் விளக்குவதற்கா[illegible] ரக் கூட்டங்கள் வடப[illegible] எல்லாப் பகுதிகளிலு[illegible] பெற ஏற்பாடாகியுள்[illegible]

# காஷ்மீர்-ஷேக்குடன் விரைவில் ஒப்பந்தம்

## பார்லிமெண்ட் அங்கீகாரம் முதலில் பெறப்படும்

### பிரதமர் நேரு அறிவிப்பு

புதுடில்லி, மே. 6

**பார்லிமெண்டின் அங்கீகாரமில்லாமல் காஷ்மீர் சம்பந்தமாக ஷேக் அப்துல்லாவுடன் எவ்வித உடன்படிக்கையும் செய்துகொள்ளப் படமாட்டாதென்று இந்தியப் பிரதமர் நேரு இன்று லோகசபையில் தெரிவித்தார்.**

**காஷ்மீரின் முன்னாள் பிரதமர் திரு. ஷேக் முகம்மது அப்துல்லாவுடன் நடத்திய பேச்சுக்கள் குறித்து இந்தியப் பிரதமர் நேரு இன்று லோகசபையில் கூறுகையில் ஷேக் அப்துல்லாவுடன் நடத்திய பேச்சுக்கள் பற்றிப் பார்லிமெண்டில் தெரிவிக்காமல் — பார்லிமெண்டின் அங்கீகாரம் பெருமல் எந்தவிதமான உடன்பாடும் செய்துகொள்ளப்பட மாட்டாதென்று தெரிவித்தார்.**

திரு. ஷேக்அப்துல்லாவுடன் நேரு நடத்திய பேச்சுக்கள் குறித்து லோகசபையில் அங்கத்தவர்கள் இன்று கேள்விகள் எழுப்பினர்.

இந்தப் பேச்சுக்கள் குறித்துப் பிரதமர் அறிவிக்கவேண்டுமென்றும் அங்கத்தவரொருவர் விடுத்த கோரிக்கைக்கு பிரதமர் நேரு பதிலளிக்கையில் பல் வேறு பிரச்னைகள் குறித்து விரிவான முறையில் பேச்சுக்கள் நடந்ததென்றும் இந்தப் பேச்சுக்களில் பல அம்சங்கள் அடங்கியுள்ளன என்றும் கூறினார்.

பேச்சுக்களின் சாராம்சத்தை சுருக்கமாகக் கூறும்படி அங்கத்தவரொருவர் பிரதமர் நேருவைக் கேட்டார். அதற்குப் பிரதமர், ஷேக் அப்துல்லாவுடன் நடத்திய பேச்சுக்கள் குறித்து சுருக்கமாகச் சொல்வது சுலபமல்ல என்று கூறினார். (5-ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

றும், ஐம்பதுக்கைம்பது இல்லாவிடினும், ஒரு நியாயமான விதாச்சாரமாவது பெண்கள் மெம்பர்களாக இருக்கலாகாதாவென்று கேட்டேன். அமெரிக்கப் பெண்கள், அரசியலில் ஆண்களுடன் போட்டியிட அவ்வளவாக ஆவல் கொள்ளவில்லை என்றும் ஆனல் பெண் வாக்காளர் நாட்டு அரசியலையும் உலக அரசியலையும் நன்கு உணர்ந்து வருவதாகவும் இதற்காக ஒரு சங்கம் இருந்து தொண்டாற்றுவதாகவும் தெரிவித்தார்.

பெண்கள் கையில் உலக நிர்வாகம் இருந்தால், உலகம் அதிக சுபிட்சமாகவும் அமைதியாகவும் இருக்குமென்று கூறியதும், அப்படியானல் தாமும் அப்பொறுப்பை ஏற்கத் தயாரென்ருர் அவர். ஆனல்...

• • •

நேற்றுக் காலை திருச்சி வானொலியைக் கேட்டேன். திருநாவுக்கரசு நாயனர் குருபூசையல்லவா? அவரைப் பற்றிக் கிருபானந்தவாரியார் அல்லது கி. வா. ஜ. இவர்கள் ஏதாவது கூறுவார்களா அல்லது தேசிகர், அப்பரின் திருத்தாண்டகங்களைப் பாடுவாரா என்று ஆவலுடன் கேட்டபோது ஏமாற்றம் தான். அன்று அப்பர்சுவாமிகளின் குருபூசை என்பது அங்குள்ளவர்களுக்குத் தெரியாதா? குறித்த பெருநாட்களில் அவர்களை மறவாமல், அவர்களைப் பற்றிப் பேசுவதும், அவர்களது பாடல்களைப் பாடுவதும் முடியாதா? இக்குறையை இனியாவது அவர்கள் நீக்கிக் கொள்ள வேண்டுமென்றே இதை இங்கு எழுதுகிறேன்.

• • •

பிறப்பானைப் பிறவாத பெருமையானைப்பெரியானை அரியானைப் பெண் ஆண் ஆய, நிறத்தானை நின்மலனை நினையாதாரை நினையானை நினைவோரை நினைவோன் தன்னை, அறத்தானை அறவோனை ஐயன் தன்னை அண்ணல்தனை நண்ணரிய அமரரேத்துந், திறத்தானைத் திகழொளியைத் திருமாற் பேற்றெஞ் செம்பவளக் குன்றினைச் சென்றடைந்தேன் நானே. —திருநாவுக்கரசர்

# பொலிஸ் அதிகாரிமூலம் தபால் விநியோகம்!

கொழும்பு, புதன்

அண்மையில் மோட்டார் போக்குவரத்து அதிகாரியின் காரியாலயத்தில் ஓர் ஆச்சரியமான சம்பவம் நடைபெற்றது. குருநாகலில் இருந்து ஒரு டாக்டர் தனது மோட்டார் வண்டியை தனது பேரில் பதிவு செய்வதற்காக, வேண்டிய பத்திரங்களை ஆங்கிலத்தில் நிரப்பி மோட்டார் போக்குவரத்து அதிகாரிக்கு அனுப்பியிருந்தார். மோட்டார் வண்டியை டாக்டரின் பேரில் பதிவு செய்த பின்னர் காரியாலயத்தினர் டாக்டருக்கு பத்திரங்கள் யாவற்றையும் கடிதத்தின் மேலுறையில் உள்ள விலாசத்தையும் சிங்களத்தில் எழுதி அனுப்பியிருந்தார்கள் கடிதம் டாக்டரிடம கொடுக்கப்பட்ட பொழுது அதனை அவர் பெற்றுக் கொள்ள மறுத்து மோட்டார் போக்குவரத்து அதிகாரிக்கு திருப்பி அனுப்பி விட்டார். திரும்பி வந்த கடிதத்தை பொலிஸ் மூலம் விநியோகம் செய்யும்படி மோட்டார் போக்குவரத்து அதிகாரி உத்தரவிட்டார். பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் டாக்டரின் விலாசத்திற்குச் சென்று கடிதத்தை கொடுக்க எத்தனித்த பொழுது, பொலிஸ் கடிதம் கொடுப்பதற்கும் மோட்டார் போக்குவரத்துக் காரியாலயத்திற்கும் ஒரு தொடர்புமில்லையென்று கடிதத்தை பெற்றுக்கொள்ள மறுத்து பொலிஸ் உத்தியோகஸ்தரை டாக்டர் திருப்பி அனுப்பி விட்டார். பின்னர் பொலிஸாரும் கடிதத்தை மோட்டார் போக்குவரத்து காரியாலயத்திற்கு திருப்பி அனுப்பி விட்டனர்.

தற்பொழுது திரும்பி வந்த கடிதத்தை மோட்டார் போக்குவரத்து காரியாலயத்து அதி[illegible]ரி "பைலில்" கட்டி வைக்[illegible]படி உத்தரவிட்டுள்ளா[illegible] இதனல் டாக்டர் தனது [illegible]ரில் பதிவு செய்த பத்தி[illegible]னை பெறமுடியாத நிலை[illegible]ட்டுள்ளது.

## வீடு தீக்கிரை

காங்கேசன்துறை, செவ்.

பலாலியைச் சேர்ந்த செல்லத்துரை செல்வராணி என்பவரின் வீட்டிற்கு நேற்றிரவு தீ மூட்டப்பட்டது. இது சம்பந்தமாக சந்தேக நபரான நடராஜா என்பவரை பொலிசார் தேடி வருகின்றனர்.

திருமதி செல்வராணி செல்லத்துரை கடந்த சில வருடங்களாக தமது கணவனைப் பிரிந்து தனியாகவே வீட்டில் வசித்து வந்தார் எனவும் செல்வராணியின் தங்கையின் கணவரான நடராசாவே தீ மூட்டியதாக தான் நினைப்பதாகவும் பொலிஸ் வாக்குமூலத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

## மக்கள் முன்னேற்ற மன்றம்

யாழ்ப்பாணம், வியாழன்

வருகிற ஞாயிறு மக்கள் முன்னேற்ற மன்றத்தின் கோப்பாய்க் கிளை புத்தூர் ஸ்ரீ விஷ்ணு வித்தியாசாலையில் அங்குரார்ப்பணஞ் செய்யப்படுமென்றுஅறிவிக்கப்பட்டுள்ளது

## நெல்லியடி இளம் விவசாயிகள் கழகம்

உடுப்பிட்டி, செவ்.

நெல்லியடி இளம் விவசாயிகள் கழகப் பொதுக் கூட்டம் திரு. எஸ். சுவர்ணராசா தலைமையில் நடைபெற்றது.

திருவாளர்கள்: கு. இராசேந்திரன், உடற்பயிற்சி ஆசிரியர் நா. திரவியம் ஆகியோரும் பேசினர்.

நடப்புவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

கழக முன்னணித் முதல்வர் திரு. க. மார்க்கண்டு, தலைவர்: திரு. கி. சிவஞானம், உப தலைவர்: திரு. ரி. மிக்கேல் ராசா, செயலாளர்: திரு.செ. சுவர்ணராஜா, உபசெயலாளர்: திரு. இ. மோகன் பொருளாளர்: திரு. த.பாலகிருஷ்ணன், கணக்குப் பரிசோதகர்: திரு. க. சிறீதரன்.

## மாணவ ஆசிரியர் தெரிவு

### சிறுபான்மையினருக்கு சலுகை

யாழ்ப்பாணம், வியாழன்

விரைவில் வெளிவரவிருக்கும் தமிழ் மாணவ ஆசிரியர் தெரிவில் சிறுபான்மைத் தமிழ் மக்களுக்குச் சலுகை காட்டுவதாக கல்வி இலாகா நிலைய உதவி வித்தியாதிபதி மக்கள் முன்னேற்ற மன்றத்தினருக்கு வாக்குறுதி கொடுத்திருப்பதாகத் தெரிகிறது.

# காருடன் மோதிய சைக்கிள்காரர் மரணம்

யாழ்ப்பாணம், வியாழன்

மது மயக்கத்தில் சைக்கிளில் வந்த நீராவியடியைச் சேர்ந்த சுந்தையா பொன்னுத்துரை என்பவர் வீதியின் மத்தியில் வந்த காருடன் மோதி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட மூன்றும் நாள் காலமானர்.

இச்சம்பவம் பற்றி, மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் முன்னிலையில் திரு. செ. இராசரத்தினம் சாட்சியம் அளித்த போது குறிப்பிட்டதாவது:-

காலஞ்சென்றவர் பகல்2-30 மணியளவில் மானிப்பாய் வீதியிலிருந்து வந்து காங்கேசன் துறை வீதிக்குத் திரும்பிய போது ஆறுதலாக வீதியின் மத்தியில் வந்துகொண்டிருந்த காரின் மட்காட்டில் மோதிக் கீழே விழுந்தார். காரைச் செலுத்தி வந்த டாக்டர் உடனே இறங்கி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய் விடுவதாகவும் தமது காரில் வரும்படியும் கேட்டார். காலஞ்சென்றவர் ஆஸ்பத்திரிக்குப் போக மறுத்து விட்டார்."

டாக்டர் ஆர். ஜே. கனகசுந்தரம் சாட்சியமளித்த போது, தமது கார்மீது மோதிக்காலஞ்சென்றவர் விழுந்த போது ஆஸ்பத்திரியில் கொண்டு போய் விடுவதாகச் சொல்லக் காலஞ் சென்றவர் மறுத்ததால் தாம் சம்பவம் பற்றிப் பொலிசில் போய் அறிவித்ததாகக் குறிப்பிட்டார்.

காலஞ்சென்றவரின் மூத்த சகோதரன் க. மாரிமுத்து சாட்சியமளித்த போது தாமும் காலஞ் சென்றவரும் ஒரே இடத்தில் வேலை செய்பவர்களென்றும் மத்தியான வேளைகளில் குடிக்கும் வழக்கம் அவருக்கு உண்டு என்றும் குறிப்பிட்டார்.

டாக்டர் தங்கராசசிங்கம் சாட்சியமளித்த போது காலஞ்சென்றவரை ஆஸ்பத்திரியில் அனுமதித்த பொழுது மது போதையில் காணப்பட்டாரென்றும், அவர் இருதயப்பலவீனமுடையவரென்றும் அத்துடன் விபத்திலேற்பட்ட காயங்களும் சேர்ந்தே மரணத்தை ஏற்படுத்தினதென்றும் அபிப்பிராயப்பட்டார்.

விசாரணை முடிவில் திரு. கனகரத்தினம், டாக்டர் கனகசுந்தரம் குற்றமற்றவரென்றும் காலஞ் சென்றவரின் பிழையாலேயே மரணம் சம்பவித்ததென்றும் தீர்ப்பளித்தார்.

# சைக்கிள் வாங்கப் பணம் தராததால் தற்கொலை?

## 20 வயது இளைஞனின் பரிதாப மரணம்

யாழ்ப்பாணம், வியாழன்

நீர்வேலி தெற்கைச் சேர்ந்த கந்தையா நாகமணி என்ற 20 வயது வாலிபன் சைக்கிள் வாங்க தந்தை ரூ 100/ கொடுக்கவில்லை என்றதினல் ஆத்திரமடைந்து நச்சுத்திராவகம் குடித்து மரணமானர்.

காலஞ்சென்றவரின் தந்தை என். கந்தையா மரணவிசாரணையில் சாட்சியமளித்த போது, தமது மகன் தம்மிடம் சைக்கிள் வாங்க நூறு ரூபாய் கேட்டதாகவும், பணம் கொடுக்கத் தாம் மறுத்ததும் "பார் உமக்கு ஒரு பாடம் படிப்பிக்கிறேன்" என்று கூறி அறைக்குள் ஓடிபபோய் ஒரு குப்பியிலிருந்த பொலிடோலை எடித்துக் குடித்தாரென்றும் உடன் தேங்காய்ப்பால் கொடுத்தும் பலனளிக்கவில்லையென்றும் குறிப்பிட்டார்.

காலஞ்சென்றவர் தற்கொலை செய்துகொண்டதாக மரண விசாரணை அதிகாரி திரு. கனகரத்தினம் தீர்ப்பளித்தார்.

# "சிறுபான்மைத் தமிழர் காணிபெற பெருமளவில் மனுச்செய்ய வேண்டும்"

யாழ்ப்பாணம், வியா.

"தமிழ் பேசும் மக்கள் மத்தியில் நிலப் பிரச்னையால் பாதிக்கப்படுபவர்கள் சிறுபான்மைத் தமிழ் மக்களாவர் ஆயிரக்கணக்கான சிறுபான்மைத் தமிழ் மக்கள் குடும்பங்கள் இன்றும் இரவல் காணிகளில் குடியிருந்து வருகின்றனர். இந்த நிலமாற குடியேற்றத்திட்டத்தில் காணிபெற முயலவேண்டும். அரசாங்க அதிபர் நெவில் ஜயவீராவைக் கண்டு மக்கள் முன்னேற்ற மன்றச் சார்பில் பேசிய தன் பலருகை கூடியளவு சலுகை கொடுப்பதாக அவர் வாக்குறுதி கொடுத்துள்ளார். ஆகவே காணியில்லாத சிறுபான்மைத் தமிழ்மக்கள் நூற்றுக் கணக்கில் காணிக்கு விண்ணப்பிக்கவேண்டும்.

இவ்வாறு மக்கள்முன்னேற்ற மன்றக் காரியதரிசி திரு. க. நடராசா மட்டுவில் தெற்கில் ஸ்ரீகணேச நாடக மன்றத்தினல் நடாத்தப்பட்ட நாடகவிழாவில் பேசும் பொழுது குறிப்பிட்டார்.

தலைமை வகித்த சாவகச்சேரி நகரசபைத் தலைவர் திரு ஆர். டி. சிவகுரு பேசும் பொழுது ஒரு சமூகத்திலுள்ளவர் ஒருவரை யொருவர் காத்திருக்கும் மனப்பான்மை மாறினலொழிய உண்மையான சமத்துவம் பெறமுடியாதென்றும் இன்னும் 10 வருடங்களில் தீண்டாமை என்பதற்கு [illegible]காதென்றும் தமது பொரு[illegible]தாரத்தை அபிவிருத்திசெய்ய ஈடுபாடு காட்டவேண்டுமென்றும் சிறுபான்மைத் தமிழ் மக்களைக் கேட்டுக்கொண்டார்.

'கொள்ளைக்காரன்' என்ற நாடகம் ஸ்ரீகணேச நாடக மன்றத்தினரால் அரங்கேற்றஞ் செய்யப்பட்டது.

## யுதாண்ட்-சக்ளா சந்திப்பு

நியுயோர்க், மே. 6

ஐ. நா. சென்றிருக்கும் இந்தியக் கல்வி மந்திரி திரு. சக்ளா, யுதாண்டைச் சந்தித்துப் பேசினர். யுதாண்ட் இந்தியா வந்து ஷேக் அப்துல்லாவுடன் பேசவேண்டும் என பாகிஸ்தான் அயல்நாட்டு மந்திரி புட்டோ தெரிவித்தது பற்றி அவர் யுதாண்டுடன் பேசியதாயும், உல்லாசப் பிரயாணியாக காஷ்மீருக்கு அவர் வருவதையும் இந்தியா வரவேற்குமென்றும், ஆனல் வெளியார் தலையீட்டை அது பொறுக்காது என்றும் சக்ளா யுதாண்டிடம் தெரிவித்ததாகக் கூறப்பட்டது.

## ஒத்திவைப்பு

புதுடில்லி, மே 6

லோகசபைக் கூட்டம் இன்று ஒத்திவைக்கப்பட்டது. வருகிற 27-ம் திகதி சபையின் விசேஷ கூட்டம் நடைபெறுமென அறிவிக்கப்பட்டது.

## மரத்திலிருந்து விழுந்தவர் மரணம்

யாழ்ப்பாணம், வியாழன்

திருநெல்வேலி கிழக்கைச் சேர்ந்த வைரவநாதர் தம்பு (60 வயது) புளிய மரத்திலிருந்து தவறி விழுந்ததனல் ஏற்பட்ட காயங் காரணமாகக் காலமானர்.

விபத்தினல் மரணம் சம்பவித்ததென்று மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் தீர்ப்பளித்தார்.

[illegible]லுப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் [illegible]ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்தி[illegible]ன அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு மே மாதம் [illegible] திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.